بسم اللہ الرحمن الرحیم

پردہ کی ضرورت (ٹمل)

# பர்தா
# ஏன் அவசியம்?

உருது மூலம்:-

**மௌலானா பீர் துல்ஃபிகார் அஹ்மத்**
**நக்ஷ்பந்தீ, முஜத்தீதி [ரஹ்]**

حضرت مولانا پیر ذوالفقار احمد نقشبندی مجددی رحمۃ اللہ علیہ

தமிழில்:-

**மௌலவி ரியாஜுத்தீன் ஹஸனீ**

**தாருல் இஸ்லாஹ்**
(சமூக சீர்திருத்தப் பாசறை)

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | பர்தா ஏன் அவசியம்? |
| ஆசிரியர் பெயர் | : | மௌலானா மௌலவி ரியாஜுத்தீன் ஹஸனீ |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கே |
| பக்கம் | : | 55 |
| விலை | : | ரூ.30.00 |
| இரண்டாம் பதிப்பு | : | பிப்ரவரி - 2026<br>ரமலான் - 1447 |
| தட்டச்சு | : | மௌலானா, அப்துல் காதிர் ஹஸனீ, PH. 6385575974 |
| வெளியீட்டு எண் | : | 3 |

**நூல் கிடைக்குமிடம் :**

சமூக சீர்திருத்தப் பாசறை

(தாருல் இஸ்லாஹ்) பள்ளபட்டி.

செல் : 89256 11688

# பொருளடக்கம்


1. மதிப்புரை........................................................................5
2. வாழ்த்துரை! ....................................................................7
3. பர்தா ஏன் அவசியம்?.........................................................10
4. எத்தனை எத்தனை தொண்டர்கள்......................................11
5. மானம் காத்தால் நற்கூலி..................................................12
6. போராளிப் பெண் யார்?......................................................12
7. மானம் காப்பது எப்படி?.....................................................14
8. ஓரு முத்தான உபதேசம்....................................................15
9. பரிசுத்த மனைவியரின் முன்மாதிரி....................................16
10. மறுக்க முடியாத உண்மை................................................17
11. தீய பார்வையால் ஏற்படும் பாதிப்பு.................................... 19
12. ஓர் அழகிய உதாரணம்....................................................19
13. ஷரீஅத் போதிக்கும் வெட்கமும், கற்பொழுக்கமும்............20
14. பார்வை மேலும் உளப்பரிசுத்தம்........................................21
15. பர்தாவின் அவசியம்.........................................................22
16. ஹெல் போன் - நரக பேசி.................................................24
17. குர்ஆனின் அழகிய உபதேசம்............................................26
18. பாவங்களை விட்டும் பாதுகாத்துக் கொள்ளுங்கள்...........29
19. கற்பைக் காத்தலும் இறைவனின் அருட்கொடையே!.........31
20. மிக முக்கியமாக கவனிக்க வேண்டிய விஷயம்..............31
21. மாபெரும் பொய்................................................................33
22. உலகத்திலே பாவத்தின் பாதிப்பு......................................35

23. புர்காக்களில் எளிமை....................................................36
24. பெண்களும், நறுமணமும்................................................38
25. நாசூக்கான விஷயம்.......................................................39
26. மாபெரும் கூலி..............................................................40
27. மார்க்க ரீதியான பேணுதல்கள்........................................40
28. வாலிபத்திலே தவ்பா செய்தல்.........................................41
29. துஆக்கள் ஏற்கப்படும் வாலிபர்........................................41
30. ஷைத்தானின் படை.......................................................41
31. மானத்தைப் பாதுகாக்க இலேசான வழி...........................43
32. அதாவுல்லாஹ் ஷாஹ் புகாரி ﵀ அவர்களின் உணர்வுப் பூர்வமான உபதேசம்.........................................................44
33. பெண்ணின் முதற் கடமை................................................44
34. ரோஷமும் ஈமானாகும்....................................................45
35. அந்நியருடன் தனித்திருப்பது அபாய மணியாகும்.............46
36. இசையின் விபரீதங்கள்....................................................46
37. மிகச்சிறந்த பெண்மணி...................................................46
38. ஷாஹ் அப்துல் அஜீஸ் ﵀ அவர்களது மாணவரின் ஈமான் ததும்பும் சம்பவம்......................................................48
39. உண்மையான அழகு,.......................................................49
40. நான் இளம் பெண்களுக்கு கூறிக் கொள்கிறேன்...........50
41. ஆங்கிலத்தில் ஒரு அழகிய அறிவுரை கூறப்பட்டுள்ளது..50
42. பார்வை செல்லாத பண்பாட்டுக் கோணங்கள்..................51
43. இச்சையின் தொடக்கமும் - முடிவும்.................................53
44. உள்ளத்தில் எழுதிக் கொள்ளுங்கள்.................................54
45. இறைப் பார்வையிலிருந்து பாக்கியமற்றவள்....................54

## மதிப்புரை

இன்றைய நம் சமுதாய வாலிப பெண்கள் கல்வி, திறமை போன்ற அனைத்திலும் ஆண்களுக்கு நாங்கள் சற்றும் சளைத்தவர்களல்ல என்று நிரூபிக்கும் விதத்தில் தங்களது பங்களிப்பை வெளிப்படுத்துகின்றனர்.

முன்னேற்றம் என்ற மாயை ஒரு புறம் இருந்தாலும் மறுபுறம் அவர்களுக்குள் பெண்மையின் யதார்த்தத்தை தொலைத்து நிற்கும் அவல நிலை தென்படுகிறது. உலக முடிவு நாள் வரை எது நலவோ அது அனைத்தையும் பெருமானார் ﷺ அவர்கள் கூறிச் சென்றுள்ளார்கள் என்பதை நாம் நம்பிக்கைக் கொண்டுள்ளோம்.

எனவே பெண்கள் தங்களின் குடும்ப ரீதியான கடமைகளை செவ்வனே ஆற்றினால் மட்டுமே சமூகம் தழைத்தோங்கும் என்பது கடந்த கால உண்மை. ஒரு பெண் தேவையின்றி வெளியே புறப்பட்டால் அவளைப் பயன்படுத்தி பிறரை வழிகெடுக்கும் அவகாசம் ஷைத்தானுக்கு கிடைத்து விடுகிறது என்ற நபிமொழி எவ்வளவு நிதர்சனமாய் தற்காலத்தில் பிரதிபலிக்கின்றது.

எனவே கல்வி போன்றவை நிர்பந்தமாக கற்க வேண்டிய அவசியம் ஏற்பட்டாலும் தன் கற்பு, மானத்தை எவ்வாறு காத்துக் கொள்வது என்ற கலையை கற்பது இக்கால வாலிபப் பெண்களுக்கு மிகக் கட்டாயமாகும்.

அவ்வகையில் ஹஜ்ரத் பீர் ஜுல்ஃபிகார் நஷ்பந்தி அவர்களின் “**பர்தா ஏன் வசியம்?**” என்ற உரை ஒரு பிரியமான தந்தை தன் வாலிப மகளுக்கு மிகப் பொறுப்புணர்வு,

வலியுடன் செய்யும் உபதேசத்தைப் போன்ற மனோவியல் தத்துவங்களை உள்ளடக்கிய மிக முக்கியமான ஒரு உரையாகும். இந்த உரையை, தமிழில் மொழி பெயர்ப்பதை இக்காலத்தின் கட்டாயம் என்பதை உணர்ந்து இப்பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது. அல்லாஹ் இதை படிக்கக்கூடிய ஒவ்வொரு பெண்ணின் உள்ளத்தையும் தூய்மையாக்கி, இதன்படி வாழ வழிவகுப்பானாக. ஆமீன்.

இப்படிக்கு:

மௌலானா மௌலவி

**முஃப்தி ஷகீல் அஹ்மத் நக்ஷபந்தி**

துணை முதல்வர்

மத்ரஸா பாக்கியாத்துஸ் ஸாலிஹாத்,

வேலூர். செல்;9444453232

# دعائیہ کلمات بابرکات

## محبوب العلماء والصلحاء حضرت اقدس مولانا حافظ پیر ذوالفقار احمد صاحب نقشبندی مجددی مدظلہ العالی دامت برکاتہم

اللہ رب العزت کی سنت ہے کہ انبیاء کرام علیہم الصلوۃ والسلام کو اپنی قوم کی زبان میں مبعوث فرماتے ہیں۔ چنانچہ ارشاد باری تعالی ہے۔ "وَمَآ أَرۡسَلۡنَا مِن رَّسُولٍ إِلَّا بِلِسَانِ قَوۡمِهِۦ" (اور ہم نے ہر رسول کو ان کی قوم کی زبان ہی میں مبعوث کیا ہے)

اس زمانے میں علاقائی زبان میں اصلاح وارشاد تصوف وسلوک نیز دین کے تمام ہی شعبوں کا لسانی وقلمی کام جلد اثر انداز اور قبولیت عامہ کا ذریعہ ہے۔

تمل زبان بہت قدیم زبان ہے، اس زبان کے بولنے والے دنیا کے مختلف مما لک میں کثیر تعداد میں آباد ہیں، تصوف کے علوم تقریبا یا تو عربی میں ہیں یا فارسی اور اردو زبان میں۔ موجودہ دور میں سلسلۂ عالیہ نقشبندیہ سے اللہ رب العزت نے سارے عالم میں خوب فیض جاری فرمایا ہے۔

نہ صرف تمل علاقے کے لیے بلکہ اس زبان کے بولنے والے سب ہی بندگان خدا کے حق میں خواہ وہ دنیا کے جس خطے میں ہوں یہ بڑی نعمت ہے کہ عزیز گرامی قدر مولانا مفتی شکیل احمد صاحب نقشبندی مجددی سلمہ زید مجدہ اپنی مجالس میں اس فقیر کے طویل خطبات سے اہم اہم مضامین ونکات کا انتخاب کرتے ہیں اور انہیں بزبان تمل ترجمہ کرکے مختصر ومفید اور جامع انداز میں رسائل کی شکل میں طبع کروا کر ہزاروں کی تعداد میں عام کرتے ہیں، رمضان المبارک میں دوران اعتکاف ان مرتب شدہ رسائل کی مستقل تعلیم ہوتی ہے، الحمدللہ ہزاروں کا مجمع ان رسائل سے استفادہ کررہا ہے۔

اللہ رب العزت سے دعا ہے کہ عزیز موصوف کی اس محنت کو شرف قبولیت بخشے اور دارین میں نفع ونجات کا ذریعہ بنائے۔ آمین

فقیر ذوالفقار احمد نقشبندی مجددی رحمتہ اللہ علیہ

کان اللہ لہ عوضًا عن کل شیئٍ

# வாழ்த்துரை!

மஹ்பூபுல் உலமா வஸ்ஸுலஹா ஹஜ்ரத் அக்தஸ் மௌலானா ஹாபிழ் ஃபீர் ஜுல்ஃபிகார் அஹ்மத் ஸாப் நக்ஷ்பந்தி, முஜத்திதீ ﵀ அவர்களின் பரக்கத் பொருந்திய துஆவின் வார்த்தைகள்.

நபிமார்களை அவர்களின் சமூக மக்கள் என்ன மொழி பேசுகிறார்களோ அதே மொழியைப் பேசுபவர்களாக அனுப்புவது அல்லாஹ்வுடைய சுன்னத்தாகும். இதையே எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகிறான்:

وَمَا أَرْسَلْنَا مِنْ رَّسُولٍ إِلَّا بِلِسَانِ قَوْمِهِ

**“மேலும் நாம் ஒவ்வொரு தூதரையும் அவர்களுடைய சமூகத்தாரின் மொழியைப் பேசக்கூடியவர்களாக அனுப்பியுள்ளோம்.”**

தற்காலத்தில் சீர்திருத்தம் மற்றும் வழிகாட்டுதல், சூஃபித்துவம் மற்றும் சுலூக் உடைய உபதேசங்கள், அதே போல் மார்க்கத்தின் அனைத்து துறைகளிலும் பேச்சு மற்றும் எழுத்தின் மூலமாக நடைபெறும் சேவைகள் அனைத்தும் அவரவர்களுடைய பிராந்திய மொழியில் இருந்தாலே விரைவான தாக்கத்தையும், பொது அங்கீகாரத்தையும் பெறக் கூடியதாக இருக்கும்.

அவ்வகையில் தமிழ் மொழி என்பது மிகத் தொன்மையான மொழியாகும் . அதைத் தாய்மொழியாகக் கொண்டுள்ளவர்கள் உலகம் முழுவதும் அதிக எண்ணிக்கையில் பரவியுள்ளனர்.

சூஃபித்துவ ஞானங்கள் அனைத்தும் கிட்டத்தட்ட அரபு, பாரசீகம் மற்றும் உருது மொழிகளில் மட்டுமே உள்ளன.

தற்போதைய சுழலில், அல்லாஹ் நக்ஷ்பந்தி தரீக்காவின் மூலம் முழு உலகிலும் சீர்திருத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறான். தமிழ்நாட்டிலுள்ளவர்களுக்கு மட்டுமல்லாமல் இந்த மொழியைப் பேசக்கூடிய அல்லாஹ்வின் அடியார்கள் உலகின் எந்தப் பகுதியில் இருந்தாலும் சரி அவர்களுக்கும் இந்த செயல் மிகப் பயனுள்ளதாகும்.

நமது அன்பான மௌலானா முஃப்தி ஷகீல் அகமது சாஹிப் நக்ஷ்பந்தி முஜத்திதீ அவர்கள் இந்த ஃபக்கீருடைய பல உபதேசங்களிலிருந்து முக்கியமான பகுதிகளைத் தேர்ந்தெடுத்து, அவற்றை தமிழில் மொழிபெயர்த்து, குறுகிய, பயனுள்ள துண்டுப்பிரசுரங்களாகவும் மற்றும் சிறு தொகுப்புகளாகவும் அச்சிட்டு ஆயிரக்கணக்கானோருக்கு விநியோகிப்பது ஒரு பெரிய பாக்கியமான காரியமாகும்.

மேலும் புனித ரமலான் மாதத்தில், இந்தத் தொகுப்புகள் தொடர்ந்து படிக்கப்பட்டு வருலதும் மிக மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். அல்ஹம்துலில்லாஹ், ஆயிரக்கணக்கான மக்கள் இதனால் பயனடைகிறார்கள்.

ஹஜ்ரத் அவர்களின் இந்த முயற்சி ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று நான் அல்லாஹ்விடம் விஷேசமாக துஆ செய்கிறேன். அல்லாஹ் அவர்களை மன்னித்து, அவர்களுக்கு நன்மை மற்றும் மன்னிப்பற்குக் காரணமாக இதை ஆக்குவானாக.! ஆமீன்.

**பீர் துல்ஃபிகார் அஹ்மத் நக்ஷபந்தீ, முஜத்தீதி [ரஹ்]**

# பர்தா ஏன் அவசியம்?

சிறுவர்கள் வாலிப வயதை அடையும் போது அவர்கள் தங்களது வாழ்வின் ஒரு புதிய கட்டத்தில் அடியெடுத்து வைக்கின்றனர். அப்போது அவர்களுக்குள் சுயமான பல சிந்தனைகளும், இனம் புரியாத பல உணர்வுகளும், ஆசைகளும் துளிர்விட ஆரம்பிக்கும்.

உணவு, குடிப்பு, உறக்கம் போன்றவை எவ்வாறு ஒரு மனிதனுடைய அத்தியாவசிய தேவைகளோ அவ்வாறே தன் துணையுடன் சேர்ந்து இன தாகத்தைத் தீர்த்துக் கொள்ளுதலும் அவசியமான ஒன்றே என்ற உணர்வு அவர்களுக்குள் உருவாகும். இதற்கு ஒரு அற்புத தீர்வாகவே பருவ வயதை அடைந்த பெண்ணிற்குத் தகுந்த வரன் கிடைத்தவுடன் உடனடியாக திருமணம் முடித்து வைத்திட வேண்டும் என்று நமக்கு நமதுமார்க்கம் உத்தரவிட்டுள்ளது.

நமது முன்னோர்கள் தங்களது பெண் பிள்ளைகள் வயதுக்கு வந்து விட்டார்கள் என்று தெரிந்தால் ஓரிரு மாதங்கள் கூட தாமதிக்காமல் உடனடியாக மாப்பிள்ளைத் தேடும் பணியில் இறங்கி, தம் பொறுப்பைத் துரிதமாக செய்து முடிக்குமளவுக்கு (இவ்விஷயத்தில்) மிக விழிப்புணர்வுடன் இருந்துள்ளார்கள்.

**சற்று சிந்திப்போமாக!**

தன் மகள் வயதுக்கு வந்த பிறகும் அவளுக்கு திருமணம் செய்து வைக்காமல் தாமதப்படுத்தினால்

அதனால் அவள் செய்யும் குற்றங்கள் அனைத்தும் அவளது பெற்றோரின் செயலேட்டில் எழுதப்படும் என்ற செய்தி பல நூற்களில் எழுதப்பட்டுள்ளது. ஆனால் தற்போதைய நிலையோ ஒரு தந்தை தன் மூத்த மகளுக்கு வரதட்சணை கொடுக்க அங்குமிங்கும் அலைந்து பணம் சேர்ப்பதற்குள் அவளுக்கு கீழுள்ள மூன்று இளைய மகள்களும் வயதுக்கு வந்துவிடும் அவல சூழலே நம்மிடம் நிலவுகிறது. இவ்வாறு வயதுக்கு வந்த பின் பத்து, பதினைந்து வருடங்கள் தன் பிறந்த வீட்டிலேயே தனித்து இருக்க நேரிடும் போது அவள் பாவங்களை விட்டு விலகி இருக்கவேண்டுமெனில் ஒன்று அவள் புத்திசுவாதின மற்றவளாகவோ அல்லது இறைநேசச் செல்வியாகவோதான் இருக்க முடியுமே தவிர இது அல்லாத வேறு எவருக்கும் பாவங்களை விட்டு தவிர்ந்திருப்பதென்பது அறவே சாத்தியமாகாது.

## எத்தனை எத்தனை தொண்டர்கள்:-

ஒரு வாலிப பெண்ணை பாவத்தில் சிக்க வைப்பதற்காகவே ஷைத்தானும், அவளது மனமும் (நஃப்ஸ்) எந்நேரமும் அயராது பாடுபட்டுக் கொண்டிருக்கின்றன. அதோடு சில மனிதர்களும் (மனித உருவில்) ஷைத்தானுடைய பிரதிநிதிகளாக செயல்படுகின்றனர். அவளது வகுப்புத் தோழர்கள் அல்லது நெருங்கிய உறவினர்கள் அல்லது வேறு அந்நிய ஆண்கள் கூட ஷைத்தானின் உதவியாளர்களாக இப்பணியில் பங்கு பெறலாம். அவளை தவறில் சிக்கவைப்பதற்கான ஷைத்தானின் எல்லா திட்டங்களையும் இவர்களே கனக்கச்சிதமாக அறங்கேற்றலாம். இதோடு ரேடியோ, டீவி, வீடியோ, பாட்டு, இசை, இண்டர்நெட், சேட்டிங் போன்ற நவீன வழிகள் அனைத்தும் தன் பங்கிற்கு பாலுணர்வை மென்மேலும் தூண்டத் தவறுவதில்லை.

இவ்வாறு தன்னைச் சுற்றி தூண்டப்படும் பாவ அலைகளில் சிக்கி தனித்திருக்கும் அப்பெண்ணின் தெளிந்த சிந்தனையில் சிறுக சிறுக மாற்றம் ஏற்பட ஆரம்பிக்கின்றது.

## மானம் காத்தால் நற்கூலி:-

வெட்கம் என்பது பெண்ணிற்கு அல்லாஹ் வழங்கியுள்ள இயற்கையான மேலும் குறிப்பான பண்பாகும். மேற்கூறிய சூழலில் ஒரு பெண் வெட்கம், நாணத்துடன் வாழ்வதே மிக சிரமமானதாக ஆகிவிடுகின்றது. இதற்காக தனக்குள் சுயமே போராட வேண்டிய இக்கட்டான நிலைக்குத் தள்ளப்படுகிறாள். இப்போராட்டத்தை ஒரு நற்பாக்கியவதி தனக்குரிய ஜிஹாதாக எண்ணிக் கொள்வாள். ஆண்கள் போர்க்களம் சென்று எதிரிகளுக்கெதிராக யுத்தம் செய்வது போல், பெண்கள் இல்லத்தில் இருந்தவாறே தனது நஃப்சுக்கு எதிராக யுத்தம் செய்கின்றனர். அங்குமிங்குமிருந்து வரக்கூடிய பாவ அழைப்புகளை பொருட்படுத்தாமல் தன் மானத்தையும், கற்பையும் பாதுகாத்தாலே நாம் அல்லாஹ்வின் பார்வையில் வெற்றி மங்கையர்களாக முடியும் என்பதை புரிந்து போராடுகின்றனர்.

## போராளிப் பெண் யார்?

போரில் வெற்றி பெறும் ஆண் தான் ஒரு மாவீரன் என்ற சிறப்பை அடைவது போல், மானத்தைக் காத்துக் கொண்ட பெண் அல்லாஹ்வின் பார்வையில் வெற்றி மங்கை என்ற உயர்வை அடைவாள். ஆனால் ஆணின் போராட்டம் போர்க்களத்தில் என்றால் பெண்ணின் போராட்டம் எப்போதும் அவளது இல்லத்தில் தன் நஃப்ஸ் என்ற எதிரியுடன் இருக்கும்.

ஆணின் போராட்டம் எல்லோருக்கும் முன்பாக வெளிப்படையாக இருக்கும் என்றால் பெண்ணின் போராட்டம் எவருக்கும் தெரியாத வண்ணம் மறை முகமானதாக இருக்கும்.

தனது எதிரிகளான நஃப்ஸ், ஷைத்தான் எவ்வாறெல்லாம் தன் கற்புக்கெதிராக தாக்குதல் தொடுக்கின்றனர் தம் வலையில் சிக்க வைக்க முயல்கின்றனர் என்பதைக் கூட வாய் திறந்து பிறரிடம் கூற இயலாமல் (தன் இறைவனிடம் மட்டுமே முறையிட்டுக் கொண்டு வெற்றிக்காக போராடுவதைத் தவிர அவளுக்கு வேறு வழியில்லை.

ஒரு பெண்ணின் வளர்ப்பு ரீதியிலான குறைபாடுகளாகிய முன் கோபம், பிடிவாதம், சோம்பேறித்தனம், எல்லை மீறிய பேச்சு போன்ற அனைத்துத் தவறுகளும், குறைகளும் மன்னிக்கப்படும்; பிறரால் பொருத்துக் கொள்ளப்படும். ஆனால் அவளின் கெட்ட நடத்தை, கற்பொழுக்கக் குறைவை மட்டும் ஒரு போதும் சகித்துக் கொள்ளப்படமாட்டாது. எவரும் பொருந்திக் கொள்ள முன்வரமாட்டார் என்பதை நினைவில் வைக்க வேண்டும்.

எனவே வாலிபப் பெண்கள் தமது கற்பு மானத்தைப் பாதுகாத்துக் கொள்வதை எல்லாவற்றையும் விட தலையாய கடமையாகக் கருத வேண்டும்.

அல்லாஹ் திருட்டைப் பற்றி குர்ஆனில் கூறும் போது;

**திருடிய ஆண், பெண் இருவரது கைகளையும் வெட்டுங்கள் (அல்மாயிதா: 38) என்று கூறியுள்ளான்.**

ஆனால் விபச்சாரத்தைப் பற்றி கூறும் போது;

**விபச்சாரம் செய்த பெண், ஆண் ஒவ்வொருவருக்கும்**

**தலா நூறு கசையடி கொடுங்கள் (அந்நூர் : 27) என்று கூறியுள்ளான்.**

இவ்வசனத்தில் முதலில் பெண், பிறகு ஆணைப் பற்றியும், திருட்டுப் பற்றிய முந்தைய வசனத்தில் முதலில் ஆண் பிறகு பெண்ணைப் பற்றியும் கூறப்பட்டுள்ளது. ஏனெனில் ஒரு பெண் சுயமே இடமளிக்காதவரை மற்ற ஆணுக்கு சந்தர்பத்தை ஏற்படுத்திக் கொடுக்காத வரை அவன் எவ்வளவு முயற்சித்தாலும் அவளின் கற்பு மானத்திற்கு கலங்கம் ஏற்படுத்த முடியாது.

மேலும் விபச்சாரம் என்பது பெண்மைக்கு இழுக்கான செயல் என்பதால் இங்கு பெண்ணை முற்படுத்தியும், திருட்டு என்பது ஆண்மைத் துவத்திற்கு (சம்பாதித்தல்) எதிரான செயல் என்பதால் அங்கு ஆணை முற்படுத்தியும் கூறப்பட்டுள்ளது என மார்க்க அறிஞர்கள் விளக்கமளித்துள்ளனர்.

## மானம் காப்பது எப்படி?

ஒரு வாலிபப் பெண்ணிற்கு இவ்வுலகில் எல்லாவற்றையும் விட முன்முதற் கடமை தன் கற்பு, மானத்தை பாதுகாப்பதேயாகும். எனவே அவள் பிற அந்நிய ஆண்கள் சம்பந்தமாக எல்லோரும் என்னை தவறாக இச்சையோடு பார்க்கக்கூடும். எனவே என்னை நானே மறைத்து பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்ற விழிப்புணர்வுடனே இருக்க வேண்டும்.

உதாரணமாக விளக்கு எரிந்துக் கொண்டிருக்கும் போது திடீரென வேகமாக காற்று வீசினால் உடனே காற்று பட்டுவிடாமல் விளக்கையே நாம் பாதுகாப்போம். இல்லையேல் காற்று பட்டு விளக்கானது அணைந்து

போகும் என்பதை நன்கு அறிவோம். அது போன்றே என் கற்பு எனும் விளக்கை கற்புக்கு கலங்கம் ஏற்படுத்தும் பாவம் என்ற சூறாவளியிலிருந்து பாதுகாப்பது என் கடமையே. நான் சற்று கவனக் குறைவாக இருந்தாலும் எனது கற்பெனும் விளக்கு அணைந்து போய்விடும். கற்பை பாதுகாக்கும் இப்போராட்டத்தில் நான் தோற்று விடுவேன் என்று அஞ்ச வேண்டும். எனவே கற்பை பாதுகாப்பதே ஒரு பெண்ணிற்கு எல்லாவற்றையும் விட மிக முக்கியமான கடமையாகும்.

## ஒரு முத்தான உபதேசம்:-

ஒரு பார்வையற்றவரின் சம்பவம் என் நினைவிற்கு வருகின்றது. ஒரு முறை இரவு நேரத்தில் அவருக்கு தண்ணீர் எடுத்து வர வேண்டிய அவசியமேற்பட்டது. எங்கோ தொலைவிலிருந்து தண்ணீர் பானையை தன் தலையில் வைத்துக் கொண்டு ஒரு கையில் டார்ச் லைட்டை பிடித்தவாறு வந்து கொண்டிருந்தார். இவரைக் கண்டவர்கள் வியப்புற்று நீயோ பார்வையற்றவன். உனக்கு இந்த லைட் வெளிச்சத்தால் எந்த பயனும் இல்லை. நீயோ ஒரு அனுமானத்தில் நடந்து கொண்டிருக்கிறாய். அப்படியிருக்க இதன் அவசியமென்ன? என்று கேட்டனர்.

அதற்கு அவர் நீங்கள் கூறுவது மிக சரியானதே! எனக்கு வெளிச்சத்தின் எவ்வித அவசியமுமில்லைதான். ஆனால் இரவு நேர இருளில் பார்வை உள்ளவருக்கும் கூட சரியான பாதையும், அதில் வருபவர்களும் தெரியாதல்லவா? எனவே அவர் வழி தெரியாமல் வந்து என் மீது மோதி என் பானை உடைந்து விடக்கூடாதே! எனவேதான் முன் வருபவர்கள் மோதி விடாமல் இருக்கவே இந்த டார்ச் லைட்டை எடுத்துக் கொண்டு செல்கிறேன் என்றார்.

அவர் எவ்வளவு புத்திசாலி என்று பாருங்கள்! மற்றவர்கள் பாதையை பார்த்து வர வேண்டும். தவறுதலாகக்கூட தன் மீது மோதிவிடக்கூடாது என்பதில் எவ்வளவு அக்கரையாக உள்ளார். ஏனெனில் எவரேனும் மோதி விட்டால் நஷ்டம் தனக்குத்தான் ஏற்படும் என்பதை நன்கு உணர்ந்துள்ளார். ஒரு வாலிப பெண்ணிற்கும் இதே மாதிரியான சிந்தனைதான் இருக்க வேண்டும்.

ஒரு வேளை நான் பர்தாயின்றி செல்ல ஏதாவதொரு அந்நிய ஆண் என்னைப் பார்த்து, அவரின் அத்தீய பார்வையால் அவர் மனதில் தவறான எண்ணம் ஏற்பட்டுவிட்டால் அல்லது நான் யாருடனாவது தனிமையில் அல்லது போனில் பேசத் தொடங்கி அல்லது வேறு ஏதேனுமொரு வகையில் இடம் கொடுத்து விட்டால் இறுதியாக பறிபோவது என் மானம்தான் என்பதை மறக்கலாகாது.

பிறகு இவ்வுலகிலும் அவப்பெயர், கேவலம் மறுமையிலும் அல்லாஹ்விடத்தில் என் மீது அதிருப்தி ஏற்படும். மேலும் நான் கற்பைப் பாதுகாக்கும் இப்போராட்டத்தில் தோற்றவளாகிவிடுவேன். நாளை என் இரட்சகனிடத்தில் எம்முகத்தைக் காட்டுவேன் என்பது போன்ற சிந்தனைகள் எந்நேரமும் மனதில் ஓடிக் கொண்டே இருக்க வேண்டும்.

## பரிசுத்த மனைவியரின் முன்மாதிரி:-

நபி ﷺ அவர்களின் பரிசுத்த மனைவிமார்களைப் பற்றிக் கூறுப்பட்டுள்ளது எப்போதேனும் ஓய்வெடுக்க அல்லது தஸ்பீஹ் போன்றவைகள் செய்ய திண்ணையில் அமர்ந்தால், கதவை முன்னோக்காமல் சுவற்றைப் பார்த்தவாறு திரும்பியே அமர்ந்திருப்பார்கள். ஏனெனில் தவறுதலாகக்

கூட எவரும் பார்க்க வாய்ப்பாக அமைந்துவிடக் கூடாது என்பதற்காகவேயாகும். சற்று சிந்தித்துப் பாருங்கள்! தன் வீட்டில் அமர்ந்திருக்கும் ஒரு பெண் திடீரென்று கதவு திறந்துவிடக்கூடாது அல்லது வேறு வழியில் பிறருடைய தவறான பார்வைப் பட்டுவிடக்கூடாது.

அதுவும் ஒரு வேளை திண்ணையில் அமர்ந்துதான் ஆக வேண்டுமெனில் வாசலின் பக்கம் முன்னோக்காமல் திரும்பிச் சுவற்றைப் பார்த்தவாறு அமர வேண்டும் என்றால் பிறரின் தீய பார்வை நம்மீது படாமல் காக்கும் விஷயத்தில் எவ்வளவு பேணுதல் தேவை என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

எனவே ஒரு பெண் தனது கற்பு, மானத்தை பாதுகாப்பதே அவளின் முக்கியமான அவசியமான பொறுப்பாகும். இதுவே இவ்வுலக வாழ்வில் அவளின் மீது சுமத்தப்பட்ட முக்கிய கடமையாகும். ஏனெனில் ஒரு பெண்ணின் மானம் பறிபோய்விட்டால் அவளுடைய அனைத்துமே பறிபோகி எதுவுமே மிஞ்சாததைப் போன்றாகும். எனவே ஒரு பெண் இது விஷயத்தில் வழமையை விட கூடுதல் கவனம் கொண்டிருப்பது கட்டாயமாகும்.

**மறுக்க முடியாத உண்மை:-**

நான் கூறும் ஒரு நியதியை நன்கு மனதில் பதிய வைத்துக் கொள்ளுங்கள். இதை நான் மிகுந்த வருத்தத்துடனே கூறுகிறேன். ஆண்கள் எப்போதும் சந்தர்ப்பவாதிகளாகவே இருப்பர். இது ஊர்ஜிதமான உண்மையும், அனுபவம் கூறும் விதியுமாகும். இதில் மறு பரிசீலனைத் தேவையில்லை என்பேன். ஆண் எப்போதும் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டே இருப்பான். அதுவும் வாலிப பெண்கள்

விஷயத்தில் வாலிபர் வயோதிகளுக்கு மத்தியில் வேறுபாடு காணுதல் இயலாது. ஒரு வாலிபப் பெண் பர்தாயின்றி வெளியேறினால் அவளை வாலிப ஆணும், அவனது நரைத்த வயோதிகத் தந்தையும் ஒன்றாக இச்சையுடன் உற்று நோக்குவர்.

பெண் ஆணின் பலவீனம் என்ற யதார்த்தத்தை என்றும் மறவாதீர். எனவேதான் நபி ﷺ அவர்கள், என்னுடைய சமூகத்தின் ஆண்கள் மீது நான் பெண்களின் குழப்பத்தையே அதிகம் பயப்படுகிறேன் என்று கூறியுள்ளார்கள். எனவே தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்வது பெண்களுடைய பொறுப்பாகும். நமது மார்க்கம் ஆண்களுக்கு தங்களது பார்வைகளை பேணும் படி உத்தரவிட்டிருப்பது போல் பெண்களுக்கும் தங்களது பார்வைகளை பேணிக் கொள்ள உத்தரவிட்டுள்ளது.

இக்கால இளம் பெண்களோ, பார்வையை தாழ்த்திக் கொள்வது ஆண்களுடைய வேலை, அவர்கள் ஏன் எங்களைப் பார்க்க வேண்டும் என்று கேட்கின்றனர். ஆனால் தங்களுக்கும் மனோ ஆசைகள் உண்டு. தங்களை வைத்து ஷைத்தான் சூழ்ச்சி செய்ய வாய்ப்பு உள்ளது என்பதையெல்லாம் வசதியாக மறந்து விடுகின்றனர். எனவே ஒரு பெண் வேறு அந்நிய ஆணைப் பார்த்தால் அவளது மனதிலும் சலனம் ஏற்படும் என்பதற்கு இதோ பரிசுத்த குர்ஆன்.

நபியின் மனைவிமார்களே! பர்தாவிலே இருந்து கொள்ளுங்கள். இது ஆண்களின் உள்ளங்கள் பரிசுத்தமாக இருப்பதற்கும், பெண்களின் உள்ளங்கள் பரிசுத்தமாக இருப்பதற்குமான சிறந்த வழியாகும் என்று சாட்சி பகர்கின்றது.

## தீய பார்வையால் ஏற்படும் பாதிப்பு:-

மனிதனின் பார்வை சீர்கெட்டுவிட்டால் ஆண், பெண் யாராக இருந்தாலும் அவர்களின் உள்ளங்களில் பாவ சிந்தனைகள் உருவாவதை தவிர்க்க இயலாதென்று உள்ளங்களின் இரகசியங்களை அறியக்கூடிய அல்லாஹ் தீர்க்கமாக கூறியுள்ளான். அதற்காக ராபியா பஸரிய்யாவை போன்று யாரையும் ஏறெடுத்தும் பார்க்கக் கூடாது என்று அர்த்தமல்ல. மாறாக குறைந்த பட்சம் சங்கைமிகு இக்குர்ஆனின் போதனையை நடைமுறைப்படுத்துவது கட்டாயமல்லவா! எனவே ஆணும் பெண்ணும் தங்களது பார்வைகளை பாதுகாப்பது மிக மிக அவசியமாகும்.

ஏனெனில் திருமறையில் வந்துள்ள தீய பார்வை கூடாது என்ற சட்டம் இருபாலரையும் தனித்தனியே முன்னோக்கி கூறப்பட்டுள்ளது. எனவே மீண்டும் ஒரு முறை ஞாபகத்தில் நிறுத்திக் கொள்ளுங்கள்.

ஒரு வாலிப பெண்ணிற்கு இவ்வுலகில் யாவற்றையும் விட மிக முக்கியமான பொறுப்பு, கடமை யாதெனில் தன் மானத்தை பாதுகாப்பதே ஆகும்.

## ஓர் அழகிய உதாரணம்:-

ஒரு உதாரணத்தைக் கேளுங்கள். உங்களிடம் பத்தாயிரம் டாலர்கள் இருப்பதாக வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் ஹஜ்ஜிற்கு பயணித்துக் கொண்டிருக்கின்றீர்கள் எனில் என்ன பகிரங்கமாகவா அதை வைத்துப் பயணிப்பீர்கள்? மாறாக மிகப்பத்திரமாக மறைத்து வைப்பீர்கள் அல்லவா.

உங்கள் பணத்தின் மீது தான் எவ்வளவு அக்கறை! லாக்கரில் வைத்து பூட்டிய பிறகும் கூட எவரும் தேடிப்பார்த்து கண்டு பிடித்து விடக்கூடாது என்ற

சிந்தனையிலே இருப்பீர்கள் எனில் கற்பு, மானம் என்பது இதைக்காட்டிலும் மதிப்புமிக்கதாயிற்றே!

இவ்வாறு ஏதாவது ஆணுடைய உள்ளத்தில் சலனம் ஏற்பட்டாலும் அவன் உங்கள் மீது கைவைக்க முடியாதபடி உங்களை நீங்களே முழுக்க மறைத்துக் கொள்ளுங்கள்.

## ஷரீஅத் போதிக்கும் வெட்கமும், கற்பொழுக்கமும்:-

நமது மார்க்கம் பெண்ணிற்கு வெட்கத்தையும், கற்பொழுக்கத்தையும் சற்று கூடுதலாக போதிக்கின்றது. எந்தளவுக்கெனில் ஒரு பெண் தலை சீவும் போது இயற்கையாகவே சில முடிகள் உதிரும். அந்த உதிர்ந்த முடிகளைக் கூட பொது இடத்தில் போடக்கூடாது என்று கூறப்பட்டுள்ளது. ஏனெனில் அந்த முடியைப் பார்க்கும் ஒரு அந்நிய ஆணின் உள்ளத்தில் அப்பெண்ணின் பால் ஈர்ப்பு ஏற்பட்டு தீய சிந்தனைக்கு வழிவகுக்கக்கூடாது என்பதற்கேயாகும்.

ஆக எந்த மார்க்கம் பெண்ணின் தலையிலுள்ள உதிரும் முடிகள் கூட மறைக்கப்படாமல் இருப்பதை விரும்பவில்லையோ அம்மார்க்கம் உயிரோடுள்ள பெண்ணின் உடல் மறைக்கப்படாமல் திறந்து இருப்பதை எப்படி விரும்பும்?

மேலும் ஒரு பெண் இறந்து விட்டால் அவளது ஜனாஸாவை கப்ரில் இறக்கும் போது கூட அவளது நெருங்கிய உறவினர்கள் மட்டுமே இறக்க வேண்டும். வேறு அந்நிய நபரின் கரம் அந்த ஜனாஸாவின் மீது படக்கூடாது என்றிருக்க, அவள் உயிரோடிருக்கும் போது தன்னை அந்நிய ஆண்களின் கரங்களில் ஒப்படைப்பதை எவ்வாறு சகிக்க முடியும்! ஆடைக்குறைப்பும், ஆபாசமும்

பரவிக்கிடக்கின்ற இக்காலத்தில் இது பற்றி அவசியம், அடிக்கடி பேச வேண்டியுள்ளது. மேலும் நாம் முஸ்லிம்களும், முஸ்லிம் அல்லாதவர்களுமாக சேர்ந்திருக்கும் சமூகச் சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

முஸ்லிமல்லாத பெண்களுக்கோ யாரைப் பற்றியும், எதைப் பற்றியும் கவலையில்லை. எனவே பாதி உடல் தெரியும் அளவுள்ள ஆடைகளில் கூட அவர்கள் உலாவுவார்கள். இவர்களைக் காணும் இஸ்லாமிய இளம் பெண்களுக்கும் பெரும்பாலும் இவர்கள் போல சுதந்திரமாக நாமும் வாழலாமே என்ற எண்ணம் வந்து விடுகின்றது.

## பார்வை மேலும் உளப்பரிசுத்தம்:-

ஒரு முஃமின் வெட்க சுபாவமுள்ளவனாக இருப்பான் என்பதை நினைவில் வையுங்கள். எனவேதான் நபி ﷺ அவர்கள் வெட்கம் ஈமானின் ஒரு முக்கிய கிளை என்றும்,

உனக்கு வெட்கமில்லையென்றால் நீ விரும்பியதை செய்து கொள் என்றும் கூறியுள்ளார்கள். குறிப்பாக வெட்கம் என்பது ஒரு முஸ்லிமான பெண்ணின் ஒவ்வோர் அங்கத்திலும் அல்லாஹ் நிரப்பி வைத்திருக்கும் மாபெரும் அருட்கொடையாகும். அதோடு பெண் என்றாலே வெட்கமுள்ளவள் என்பது இயற்கையாகும். எப்பெண்ணிடமிருந்து கூச்சம், வெட்க சுபாவம் போய் விடுமோ அவள் தன்னிடமிருந்து அல்லாஹ்வின் மாபெரும் அருட்கொடை பிடுங்கப்பட்டுவிட்டதாக எண்ணிக் கொள்ளட்டும்.

அந்த துர்பாக்கியவதிக்கு இவ்வுலகிலும் கண்ணியமில்லை. மறுமையிலும் கண்ணியமில்லை. தனது பார்வை மேலும்

உள்ளத்தை தூய்மையாக வைத்துக் கொள்வது தனது கற்பையும், மானத்தையும் பாதுகாப்பது பெண்ணின் கடமைகளிலேயே பிரதான கடமையாகும்.

உதாரணமாக நீங்கள் ஒரு காரை ஓட்டிச் சென்றால் எதிரே பல வாகனங்கள் வரும். இருப்பினும் எந்த வாகனமும் நம் வாகனத்தை மோதிவிடாதபடி நாம் தான் நமது காரை பாதுகாப்பாக ஓட்ட வேண்டும் என்று அறிந்திருப்பீர். இவ்வாறே நமது கற்பெனும் வாகனத்தை பாதுகாப்பாக கொண்டு செல்வது நமது பொறுப்பு என்பதையும் விளங்கிக் கொள்ளுங்கள். எந்த ஓட்டுனரும் நான் என் வழியில் போய் கொண்டே இருப்பேன். எதிரில் வருபவர் வேண்டுமானால் விபத்திலிருந்து தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்ளட்டும் என்று அலட்சியமாக இருக்க மாட்டார்.

மாறாக விபத்திலிருந்து முடிந்த வரை தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்ளவே ஒவ்வொருவரும் விரும்புவர். இவ்வாறே வாலிபப் பெண்களும் தமது கற்பு விஷயத்தில் எவ்வித அசம்பாவிதமும் நடந்து விடாதபடி தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்ள முயல வேண்டும்.

## பர்தாவின் அவசியம்:-

ஆண்கள் பெண்கள் கலந்திருக்கும் கலப்புக் கூட்டங்களை விட்டு முடிந்தளவு தவிர்ந்திருக்கும் படி ஆரம்பமாக நமது மார்க்கம் பெண்களுக்கு வலியுறுத்துகின்றது. இன்னும் சுருங்கக் கூறினால் ஒரு பெண் தன் மஹ்ரமான ஆண்களுக்கு முன்னால் வர மட்டுமே அனுமதி உள்ளது. ஏனெனில் இம்மஹ்ரமான உறவு மட்டுமே வெட்கத் தன்மை கொண்ட பாச உறவாகும். உண்மையான அன்பும்,

அரவணைப்பும் நிரம்பிய உறவாகும். குறிப்பாக தந்தை, சகோதரர்களுடனான உறவுகள் அனைத்தும் இவ்வகையான உறவுகளேயாகும்.

இவர்களல்லாத ஏனைய மஹ்ரமல்லாத உறவுகள் அனைத்தும் ஆசை, சபலம் ஏற்படுத்தக்கூடிய உறவுகளாகும். ஆகையால்தான் இவ்வகையான மஹ்ரமல்லா உறவுகளுடன் பர்தாவை பேணும்படி ஷரீஅத் உத்தரவிடுகின்றது.

இன்னும் நமது வீட்டிலேயே இருக்கக்கூடிய மஹ்ரமல்லாதவர்களிடமும் பர்தாவைப் பேணுவது மிக முக்கியமானதாகும்.

நபி ﷺ அவர்கள் கணவனின் சகோதர்கள் (கொழுந்தன்) மரணத்தைப் போன்று என்று எச்சரித்துள்ளார்கள். ஏனெனில் இவரோ மஹ்ரமல்லாதவராக இருப்பதுடன் மிக அருகாமையில் இருப்பவராகவேறு உள்ளார். எனவே இவ்வகையானவர்களை விட்டும் விலகியிருப்பது மிக மிக அவசியமானதாகும்.

இவை அனைத்திற்கும் மிக இலேசான வழி யாதெனில் மஹ்ரமல்லாத எவரிடமும் நான் பேச மாட்டேன் என்றும் பேசக்கூடிய சந்தர்ப்பமோ, அவசியமோ ஏற்படாத விதத்தில் என் செயல்பாடுகளை அமைத்துக்கொள்வேன் என்றும் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும்.

நானும் எந்த அந்நிய ஆணை பார்க்க மாட்டேன், எந்த அந்நிய ஆணும் என்னை பார்க்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்த மாட்டேன், மேலும் அந்நிய ஆண் எவருடனும் பேசவே மாட்டேன் என்பதை தமது கொள்கையாகவே ஆக்கிக் கொள்ளுங்கள். ஏனெனில் பேசுவதற்கு எப்போது வாய்ப்பு கிடைத்து விடுமோ உடனே ஷைத்தான் இடையில்

புகுந்து தன் சதியை அரங்கேற்றுவதற்கான சாதகமான சந்தர்ப்பம் கிடைத்து விட்டது என்று அர்த்தமாகும்.

## ஹெல் போன் - நரக பேசி:-

ஒரு அந்நிய ஆணும், பெண்ணும் தங்களுக்கிடையே பேசத் தொடங்கினால் ஷைத்தான் அவ்விருவரின் உள்ளங்களில் தவறான ஆசையையும், ஈர்ப்பையும் ஏற்படுத்திவிடுகிறான். மேலும் அவ்விருவருக்கும் மத்தியில் இடைத்தரகராக இருந்து கொண்டு அவர்களை வழிகெடுப்பதற்கும், பாவத்தில் சிக்க வைப்பதற்குமான வாய்ப்பை பெற்று விடுகிறான் என்பதாக ஒரு ஹதீஸில் கூறப்பட்டுள்ளது.

எனவே எச்சந்தர்பத்திலும் ஒரு அந்நிய ஆணுக்குக் கடிதம் எழுதுவதோ அல்லது மெஸேஜ் அனுப்புவதோ அல்லது ஃபோனில் உரையாடுவதோ அல்லது நேருக்கு நேர் சந்தித்து பேசுவதோ போன்ற எந்த தகாத காரியங்களுக்கும் இடமளித்துவிடாமல் விழிப்புணர்வாக இருக்க வேண்டும். எப்பெண் இது போன்ற சந்தர்ப்பங்களை விட்டும் தன்னைத் தற்காத்துக் கொண்டாளோ உண்மையில் அவளே தன் மானத்தைப் பாதுகாத்துக் கொண்டவளாக இருக்க முடியும்.

இக்கால இளம் பெண்கள் தங்களுடைய பெற்றோரின் அனுமதியுடனே தங்களுக்கென்று தனி செல்ஃபோன்கள் வைத்துக் கொள்வது சகஜமாகிவிட்டது.

நான் சமீபமாக சென்று வந்த நாட்டில் 90 % வாலிபப் பெண்கள் தங்களுக்கென்று தனி செல்போன்கள் வைத்திருப்பதாக கேள்வியுற்றேன். அதை சகஜமாக பள்ளி, கல்லூரிகளுக்கும் எடுத்துச் செல்கின்றனர்.

அவர்கள் செல்போனை வைத்து என்ன செய்வர்? ஏதாவது வகுப்புத் தோழனிடமிருந்து அல்லது அறிமுகமான நண்பனிடமிருந்து அடிக்கடி ஃபோன் அழைப்புகள் வரும். உண்மையில் அது செல்போன் அல்ல! வாலிப பெண்ணின் கையில் இருக்கும் (Hell Phone) நரக அலைபேசி ஆகும். இதை செல்ஃபோன் என்றழைப்பதை விட ஹெல்ஃபோன் என்றழைப்பதே மிகப் பொருத்தமானது.

ஆம் அவளது கையில் இருப்பது நரகத்தின் ஃபோன் ஆகும். நீ எனக்குள் வந்துவிடு உனக்காகவே நான் காத்திருக்கிறேன் என்பதே அந்நிய ஆணிடமிருந்து வரும் போன் அழைப்புகளின் யதார்த்தமாகும்.

மஹ்ரமல்லாத ஆண் தன்னுடன் பேசுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்துவது ஒரு பெண் செய்யும் மிகப்பெரும் தவறுகளில் ஒன்று என்பதை எப்போதும் மறந்துவிடாதீர்கள்.

எனவேதான் இவ்வழியை ஒரேடியாக அடைக்கும் விதமாக குலைந்து பேசாதீர்கள் என்று குர்ஆன் உத்தரவிட்டுள்ளது. அதாவது ஒரு வேளை எப்போதாவது பேச வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டாலோ அல்லது பேச்சை தவிர்க்க இயலாத நிலை ஏற்பட்டாலோ தனது பேச்சில் மென்மையைக் காட்டாமல் சற்று கடினமான தொனியில் பேச வேண்டும். அதற்கென்று நல்லது, கெட்டதின் பாகுபாடின்றி கடுஞ்சொல் கூற வேண்டும் என்று அர்த்தமல்ல.

மாறாக தேவையான பேச்சுக்களை மட்டும் பேசுவது, தேவையில்லாத அநாவசியமான பேச்சிற்கு இடம் தராதிருத்தல் என்பதே இந்த வசனத்தின் நோக்கமாகும்.

## குர்ஆனின் அழகிய உபதேசம்:-

பெண்கள் அந்நிய ஆண்களுடன் குலைந்து பேசக்கூடாது. சற்று கடினமான தொனியிலே பேச வேண்டும். ஏனெனில் இவ்விதத்தில் பேசும் போது அவளுடன் வளவளவென்று பேச்சை வளர்க்க எவருக்கும் தைரியம் பிறக்காது. இதற்கு மாற்றமாக மென்மையாக, வசீகரமாக பேசினால் உள்ளத்தில் கயமைத்தனம் கொண்டவர்களுக்கு தொடர்ந்து அவளிடம் பேச்சு கொடுக்கலாம் என்ற ஒரு விதமான ஆசை உண்டாகிவிடும் என்று குர்ஆன் தெளிவாக கூறியுள்ளது. ஆண்களின் உள்ளத்தில் இச்சை எனும் நோய் உறுதியாக இருக்கவே செய்யும். எனவே அப்பெண் யாருடனாவது மென்மையாகக் குலைந்து பேசினால் கேட்பவருக்கு இவளது குரலோ அல்லது பேசும் முறையோ பிடித்தமாகிவிட்டால் போதும் வேறெதுவும் அவளிடம் இல்லை என்றாலும் இவள் தானே வலிய வந்து பேசுகிறாளே என்றெண்ணி இன்னும் ஒருபடி முன்னேறி இவளை அடைய விரும்புவான்.

ஏனெனில் அவனுக்கு எப்படியாவது சந்தர்ப்பம் கிடைப்பது தானே நோக்கம். ஏற்கனவே நான் கூறியுள்ளேன். ஒரு ஆண் எப்போதும் சந்தர்ப்பவாதியாகவே, வாய்ப்பைத் தேடி அலைபவனாகவே இருப்பான். ஆனால் எவரின் உள்ளத்தில் இறைநேசத்தின் ஒளி இருக்குமோ மேலும் எவரை அல்லாஹ் தன் விஷேச அருளால் பாதுகாத்தானோ அவர்களைத் தவிர மற்ற அனைத்து ஆண்களும் இவ்விஷயத்தில் ஒரே நிலையில் உள்ளவர்கள் ஆவர். எனவேதான் நமது மார்க்கம் பேச வேண்டிய தேவை ஏற்பட்டால் சற்று கடினமான தொனியில் பேசுங்கள் என்று கூறியுள்ளது.

பெரும்பாலான வாலிபப் பெண்களின் மனதில் நான் அந்த நபருடன் ஃபோனில் தானே பேசுகிறேன், நேரில் ஒன்றும் பார்க்கவில்லையே இதில் என்ன தவறு இருக்கிறது என்றெண்ணுகின்றனர். தங்கள் தோழிகளுக்கு மத்தியில் இதை அலட்சியமாகக் கருதி இதில் நான் என்ன தவறு செய்து விட்டேன் பேசுவதென்ன குற்றமா? என்று சில சமயம் வாதிடவும் செய்கிறார்கள்.

இது ஷைத்தானின் மாபெரும் சதியாகும். ஏனெனில் எப்போது பேசுவதற்கு ஆயத்தமாகிறோமோ பிறகு அடுத்தடுத்த அனைத்து விஷயங்களும் எளிதாகிவிடும். சற்று சிந்தித்துப் பாருங்கள்!

நபிமார்களில் எந்த நபியும் யா அல்லாஹ்! நான் உன்னைக் காண வேண்டும் என்று அல்லாஹ்விடம் துஆ செய்யவில்லை. ஆனால் மூஸா ﵇ அவர்கள் மட்டும்தான் என் இரட்சகனே! நான் உன்னைக் காண ஆவல் கொண்டுள்ளேன் உன் தரிசனம் தருவாயாக என்று கோரிக்கை வைத்தார்கள். அல்லாஹ்வுடன் நேரடியாக பேசும் வாய்ப்பு கிடைத்ததே அவர்களின் அக்கோரிக்கைக்கு காரணம் என்பதாக குர்ஆன் விரிவுரையாளர்கள் எழுதியுள்ளார்கள்.

எனவே எவருக்கு பிறரிடம் பேசும் வாய்ப்பு கிடைத்துவிடுமோ அடுத்ததாக அவரைக் காண வேண்டும் என்ற ஆவல் மனதிற்குள் உருவாகும் என்பது மறுக்க இயலாத உண்மையாகும். ஆக எவருக்காவது ஃபோனில் பேச சந்தர்ப்பமளித்தால் அடுத்து அவரை நேரில் சந்திக்கும் ஆவல் ஏற்படுவதை தடுக்க இயலாது என்பதை மேற்கூறிய புனித குர்ஆனின் வசனத்தின் வாயிலாக அறிந்து கொள்ளலாம். எப்போது நேரடி

சந்திப்பு ஏற்பட்டு விடுமோ இதற்குமேலென்ன பர்தா? என்ற வெட்கமற்ற நிலை உண்டாகிவிடும்.

நீ இறைவனுமல்ல! என் அன்பு மலக்குகளின் அன்பை போன்றதுமல்ல! நாம் இருவருமே மனிதர்களென்றால் நமக்கிடையே ஏனோ இத்தனை திரைகள் என்று ஒரு கவிதை கூறுவது போல் அறவே பர்தா என்பதே அவ்விருவருக்கு மத்தியில் இல்லாமலாகிவிடும். பர்தா இல்லாமலாகிவிட்டால் பிறகென்ன எல்லா தவறுகளும் இலகுவாக நடந்து முடிந்து விடும்.

எல்லாம் முடிந்த பின்னே நடந்த தவறை எண்ணி வருந்தும் அவல நிலைக்கு இருவரும் தள்ளப்படுவர். எனவே ஆரம்பத்திலேயே இதைத் தடுத்துவிட வேண்டும். எவ்விதத்திலும் இடமளித்து விடக்கூடாது.

இன்ன நபர் பார்க்க அழகாக உள்ளார். எனக்கு அவரைப் பிடித்துள்ளது. மேலும் இன்னவர் பழக இனிமையானவர் எனவே நான் அவரை விரும்புகிறேன் என்ற வார்த்தைகளெல்லாம் மடத்தனமான உளறல்களாகும். ஒருவரது தலை விதியில் அவர் வாலிபனாகி, பின் திருமணம் செய்வார் என்று எல்லாவற்றையும் அல்லாஹ் எழுதியிருக்க அதற்கான நேரம் வரும் வரை பொறுத்திருப்பது தானே அறிவுடைமை.

ஒவ்வொரு காரியமும் அதற்குரிய தருணத்தில்தான் நல்லதாக, பொருத்தமானதாக இருக்கும். யார் அந்நேரம், தருணம் வருவதற்கு முன்பே பாவங்களின் மூலமாக தனது ஆசைகளை பூர்த்தி செய்து கொள்வாரோ அவரது பிந்திய வாழ்வில் சிரமத்தில் சிக்கித் தவிக்கும் நிலைக்குத் தள்ளப்படுவார்.

விபச்சாரம் செய்து விட்டு இவ்வுலகில் நான் நிம்மதியாக வாழ்கிறேன் என்று கூறும் ஒரு நபரையாவது காட்ட முடியுமா? இது போன்ற தவறை செய்தவர்கள் எவரிடமாவது பேச நேர்ந்தால் எத்தனை அச்சங்கள்; தன் தவறை தந்தையிடம், தாயிடம் மறைக்க வேண்டும். சகோதரியிடம் மறைக்க வேண்டும், இத்தவறு எவருக்கும் தெரிந்துவிடக்கூடாது என்று இன்னும் எத்தனை எத்தனை சஞ்சலங்கள். ஒரு பாவத்தை செய்துவிட்டு அதற்கான துன்பத்தை வாழ்நாளெல்லாம் சுமந்து திரிவது என்ன அறிவுடமையா? இந்த ஒரு பாவத்தை மறைப்பதற்கே அடுக்கடுக்காக பல பொய்களைப் பேசி எப்படியெல்லாம் நாடகமாட வேண்டியுள்ளது பாருங்கள்.

இன்னும் அந்நபருடன் மீண்டும் பேசுவதற்காக பொய் சொல்லி சந்தர்ப்பத்தை உருவாக்க நேரிடும். மேலும் இதற்காக சில தவறான விளக்கங்கள் கூறி நாடகமாடும் நிலை ஏற்படலாம். செய்ததென்னவோ ஒரு பாவம். ஆனால் பலநூறு பாவங்களுக்கான வாயில்களை அது திறந்து விடுகிறது. மேலும் தனது தவறை மறைப்பதற்காக எத்தனையோ பொய் சத்தியங்கள் செய்யும் நிலைக்கும் தள்ளப்படலாம்.

## பாவங்களை விட்டும் பாதுகாத்துக் கொள்ளுங்கள்:-

ஒரு இளம்பெண் வேறொரு நாட்டிலிருந்து கடிதம் வாயிலாக என்னிடம் தன் சிக்கலான பிரச்சனைக்கு மார்க்கத் தீர்ப்பு கேட்டிருந்தாள். அதில் அவள் குறிப்பிட்டிருந்தது என்னவெனில், நான் ஒரு அந்நிய ஆணுடன் சேர்ந்து தவறு செய்து விட்டேன். என் தாயாருக்கு அது தெரிய வந்து என்னை கடுமையாக திட்டி, ஏன் இக்காரியத்தை செய்தாய் என்று கேட்டாள். நான் என் தாயை நம்ப

வைப்பதற்காக பொய் சத்தியம் செய்து விட்டேன். ஆனால் உன்னுடைய சத்தியத்திலும் எனக்கு அறவே நம்பிக்கை இல்லை என்று கூறி என்னை மறுத்து விடவே, வேறு வழியின்றி கடைசியாக ஒரு வேளை எனக்கு அவனுடன் தொடர்பு இருந்தது உண்மையெனில் நான் மரணிக்கும் போது எனக்கு கலிமா வராமல் போகட்டும் என்று கூறிவிட்டேன்.

அப்போது என் தாய்முன் ஏற்படவிருந்த அவமானம், தலைகுனிவிலிருந்து தற்காலிகமாக தப்பித்துவிட்டேன். ஆனால் அதன் பிறகு என்னுடைய இறுதி நிலை என்னவாகுமோ என்ற உறுத்தல் எனக்குள் ஏற்பட்டுவிட்டது. தற்போது நான் தீன், துன்யா இரண்டிலும் நஷ்டமானவளாக என்னை உணர்கிறேன். எனக்கு ஏற்படவிருக்கும் முடிவு பற்றி மிகவும் அஞ்சிக் கொண்டு இருக்கிறேன். எனக்கு பொய் சத்தியத்தின் கெட்ட முடிவிலிருந்து தப்பிக்க ஏதேனும் வழி கூறுங்கள் என்று குறிப்பிட்டிருந்தாள்.

இவையனைத்தும் எதன் காரணமாக? அப்பெண் ஒரு தவறான பாதையில் அடி எடுத்து வைத்துவிட்டாள். அதன் முடிவு அவளது ஈமானுக்கே கேடாய் அமைந்துவிட்டது. ஒரு பாதை அபாயகரமானதெனில் ஏன் அதில் அடி எடுத்து வைக்க வேண்டும்? உதாரணமாக உங்களுக்கு முன் நூறு சாக்லேட்டுகள் வைக்கப்பட்டுள்ளன என்று வைத்துக் கொள்வோம். இவைகளில் ஒன்றில் மட்டும் விஷம் கலந்துள்ளது. மீதமுள்ள தொன்னூற்று ஒன்பதும் நல்லதே.

எனவே தாராளமாக நல்ல சாக்லேட்டுகளை சாப்பிடுங்கள் என்று கூறப்பட்டால் நீங்கள் அதில் ஒன்றைக் கூட எடுக்கமாட்டீர்களல்லவா? ஏனெனில் என் உயிருக்கு

ஆபத்து நேர்ந்துவிடக்கூடாது என்ற அச்சமே எதையும் தொடக்கூடாது என்று உங்களை தடுக்கும்.

ஆக உயிருக்கு ஆபத்தான காரியம் என்றால் நூற்றுக்கு ஒரு சதவீதம் கூட அதில் (ரிஸ்க்) சிரமம் எடுக்க விரும்புவதில்லை. இவ்வகையான அபாய விளையாட்டில் தலையிடக்கூட விரும்பாத நீங்கள் எங்கு மானத்திற்கு ஆபத்தோ அங்கு மட்டும் ஏன் (ரிஸ்க்) சிரமம் எடுக்கிறீர்கள்? ஏன் அதில் முன்னேறத் துடிக்கிறீர்கள்? உயிரை விட மானம் ஒன்றும் அனாவசியமானதல்லவே! என் மானம் பறி போய்விடக்கூடாது என்ற நோக்கில் அங்கும் நூற்றுக்கு நூறு சதவீதம் தவிர்ந்திருப்பதுதானே நியாயம்.

## கற்பைக் காத்தலும் இறைவனின் அருட்கொடையே!

மறுமை நாளில் கற்பொழுக்கத்தைப் பேணாத பெண்ணிடம் அல்லாஹ் ஏன் மானத்தை பாதுகாக்கவில்லை? என்று கேட்பான். எனவே வாலிபப் பெண்கள் தங்களின் கற்பு, மானத்தை பாதுகாப்பதையே தங்கள் வாழ்வின் ஜிஹாது என்பதாக உணர வேண்டும். எந்தப் பெண் தன் கற்பு, மானத்தை பாதுகாத்து பிறகு மரணம் வரை கற்புக்கரசியாகவே வாழ்ந்து மரணிப்பாளோ அவளை அல்லாஹ் மறுமை நாளில் ஷஹீதுகளின் (உயிர்த்தியாகிகளின்) வரிசையில் நிறுத்துவான்.

அல்லாஹ் மிகுந்த தயாளமுள்ளவனாக இருக்கிறான். ஒருவரை எவராவது பாவத்தின் பால் அழைத்து அவர் நான் அல்லாஹ்வை பயப்படுகிறேன் என்று கூறி அப்பாவத்தை விட்டும் விலகிவிடுவாரானால் மறுமை நாளில் தன்னுடைய அர்ஷின் நிழலில் அவருக்கு இடமளிப்பான் என்று ஒரு ஹதீஸில் வந்துள்ளது. இந்த

அருட்கொடை எதனால் கிடைத்தது? தன்னைத் தானே பாவத்தை விட்டும் தற்காத்துக் கொண்டதினால் தானே.

## மிக முக்கியமாக கவனிக்க வேண்டிய விஷயம்:-

இன்னொரு விஷயத்தையும் நினைவில் வையுங்கள். நல்ல முறையில் புரிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள். மனித வாழ்வின் ஒவ்வொரு விஷயமும் நிர்ணயிக்கப்பட்டதாகும். ஒவ்வொன்றிற்கும் ஒரு துல்லிய (கோட்டா) அளவுண்டு. ஒரு மனிதன் தன் வாழ்நாளில் எத்தனை முறை சுவாசிப்பான். எவ்வளவு கவளம் உணவு உண்பான். எவ்வளவு மிடறு தண்ணீர் குடிப்பான். மேலும் எவ்வளவு காலம் வாழ்வான் என்று அனைத்திற்கும் கோட்டா உண்டு. அவ்வாறே ஒருவன் தன் வாழ்நாளில் எத்தனை முறை தன் உடல்தேவையைப் பூர்த்தி செய்வான் என்பதற்கும் கோட்டா உண்டு.

அப்படியிருக்க எவர் மார்க்க வரம்புகளைத் தாண்டி தன் உடல் ஆசையை பூர்த்தி செய்து கொள்ள முயற்சிப்பாரோ அவரை ஆகுமாக்கப்பட்ட (பல) வழிகளில் இன்பம் அனுபவிப்பதை விட்டும் அல்லாஹ் பாக்கியமற்றவனாக ஆக்கிவிடுவான். அதன் பிறகு முடிவு என்னவாகும்? அழுது புலம்பிக் கொண்டே திரிவாள். எனது கணவன் என்னை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. என் வாழ்வில் எந்த சந்தோஷமும் இல்லை.

மேலும் அவர் என்னிடம் நல்ல விதமாக பேசுவதில்லை என்று புலம்பிக் கொண்டே அலைய வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும். எனவே நீங்கள் ஷரீஅத்துடைய வரம்புகளை மீறி, அந்நிய நபருடைய அன்பைப் பெற முயற்சிப்பீர்களேயானால் அதற்கு தண்டனையாக (எதிர்கால)

கணவனிடமிருந்து கிடைக்கவிருக்கும் தூய அன்பை விட்டும் அல்லாஹ் உங்களை பாக்கியமிழந்தவர்களாக தவிக்கவிட்டு விடுவான்.

மேலும் இது அல்லாஹ்வின் பயத்தோடு சம்பந்தப்பட்ட விஷயமாகும். எந்தப் பெண்ணின் உள்ளத்தில் இறையச்சம் இருக்குமோ அவளே தன் மானத்தை பாதுகாத்துக் கொள்வாள். மேலும் அவளே சிற்றின்பங்களின் பக்கம் பார்வை செலுத்தாமல் என்றென்றும் நிரந்தரமான மறுமையின் பேரின்பங்களின் பால் கவனம் செலுத்துவாள். இறுதியாக அவளே இறைவன் முன் பாக்கியமுடையவளாக தலைநிமிர்ந்து நிற்கத் தகுதி பெறுவாள்.

ஒவ்வொருவரும் தன் தீய நண்பர்கள் சம்பந்தமாக, பாவத்தின் பக்கம் தன்னை அழைத்த அனைவர் சம்பந்தமாகவும், நாளை மறுமை நாளில் மிகவும் வருந்தி கைசேதப்பட்டு என் கைசேதமே! நான் இன்னாரை நண்பனாக ஆக்கிக் கொள்ளாமல் இருந்திருக்கலாமே! என்று அழுது புலம்புவர். இவன் உன்னுடைய நினைவை விட்டும் என்னை திசை திருப்பி விட்டான் என்று அல்லாஹ்விடம் அவரை தண்டிக்க வேண்டுவார். ஆக இது போன்ற நபர்கள் இவ்வுலகிலும் நம்பிக்கைக் குறித்தானவர்களாக இருக்க மாட்டார்கள் என்பது உறுதியானதே!

## மாபெரும் பொய்:-

நான் கூறும் மிக அடிப்படையான, முக்கியமான விஷயத்தை பெண்கள் நன்கு கவனமாக கேட்டுக் கொள்ளுங்கள். ஒரு பெண் அந்நிய ஆணுடன் நெருங்கி பழக ஆரம்பித்துவிட்ட பின் அவன், நான் உன்னை திருமணம் செய்து கொள்வேன், உன்னை

என்னுடையவளாக்கிக் கொள்வேன் என்று எவ்வளவு பாசாங்கு வார்த்தைகளை கூறினாலும் அவையனைத்தும் பொய்களே! தப்பு செய்வதற்கு சந்தர்ப்பத்தை தேடும் கள்ளச் செயலே! ஒரு பெண்ணோடு தவறு செய்ய எண்ணுபவன் வெளிப்படையாக, பகிரங்கமாக நான் உன் மானத்தை குலைப்பதற்காகத்தான் உன்னுடன் பழகுகிறேன் என்று கூறினால் எந்தப் பெண்ணும் அவனை நெருங்க மாட்டாள் மட்டுமல்ல; தூர ஓடிவிடுவாளல்லவா?

எனவே எப்போதும் பெண்ணிடம் கெட்ட எண்ணத்துடன், பழகுபவர்கள் அடிக்கடி அவளுக்கு பகட்டான புகழாரம் சூட்டுவார்கள். சத்தியங்கள் பல செய்வார்கள். இது உண்மையில் அவளைப் புகழவில்லை. மாறாக புகழ் வார்த்தைகள் மூலமாக அவளை ஏமாற்றவே முயல்கிறார்கள். அப்புகழ்ச்சிகள் அனைத்தும் உண்மையில் அவனது உள்ளத்திலுருந்து வருபவை அல்ல. எந்தளவுக்கெனில் அவளின் தவறுகளைக் கூட மிகச்சரியானதே என்று உறுதிப்படுத்துவர். உன்னை என் மனைவியாக, வாழ்க்கைத் துணைவியாக ஆக்கிக் கொள்ளவே ஆசைப்படுகிறேன் என்ற வார்த்தைகளனைத்தும் சுத்தப் பொய்களே!

இது போன்ற வார்த்தைகளுக்கு ஒரு அபலைப் பெண் மயங்கி, அவனை நம்பி நெருங்கிப் பழக ஆரம்பித்து விட்டால் இறுதியாக அவன் தன் நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்ட பிறகு, நமது திருமண முடிவை என் தாய் ஒப்புக் கொள்ளவில்லை. தந்தை ஒப்புக் கொள்ளவில்லை, வீட்டிலுள்ளவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை. நான் இப்போதும்

உன்னை மனைவியாக்கிக் கொள்ளவே ஆசைப்படுகிறேன், ஆனால் நான் என்ன செய்வது?

என் வீட்டார் அறவே அனுமதி தர மறுக்கின்றனரே என்று கள்ள நாடகமாடுவான். இறுதியாக அவளை திருமணம் செய்து கொள்ளாமல் தனியாக தவிக்கவிட்டுவிடுவான் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

## உலகத்திலே பாவத்தின் பாதிப்பு:-

ஒரு பெண்ணுடன் தவறான தொடர்பு வைத்திருக்கும் வாலிபன் அவளை ஒரு போதும் திருமணம் செய்து கொள்ளமாட்டான் என்ற உண்மையை நினைவில் வையுங்கள். ஏனெனில் இளம்வயதிலிருந்தே இது போன்ற பாவத்தில் ஈடுபட்டிருந்த எத்தனையோ நபர்கள் தவ்பா செய்ய அடியேனிடம் வருகிறார்கள். நீங்கள் ஏன் தவறான தொடர்பு வைத்திருந்த அப்பெண்களை அதற்குப் பிறகு திருமணம் செய்து கொள்ளவில்லை? வாழ்நாள் முழுக்க எத்தனையோ சத்தியங்கள் செய்து நம்பவைத்து விட்டு திருமணம் செய்ய நல்ல சந்தர்ப்பம் வாய்த்த போது ஏன் அவர்களை திருமணம் செய்து கொள்ளவில்லை? என்று நான் அவர்களிடம் கேட்ட போது, அவர்கள் அனைவரும் எப்போது இவள் வாலிபப்பருவத்திலேயே என்னுடன் துணிச்சலாக தவறான தொடர்பை வைத்திருந்தாலோ அவள் எனக்கு மனைவியான பிறகு நாளை பழக்க தோஷப்படி இன்னொருவனுக்கு இடமளிக்கமாட்டாள், மற்றவரிடம் தவறான தொடர்பில் இருக்கமாட்டாள் என்று என்ன உத்திரவாதம் இருக்கிறது? இச்சிந்தனைதான் அவளை திருமணம் முடிப்பதை விட்டு என்னை தடுத்து விட்டது என்று கூறினார்கள்.

ஆக ஆணின் உள்ளத்தில், தகாத முறையில் என்னோடு தவறான தொடர்பு வைத்திருந்த பெண் என் மனைவியான பிறகு நாளை வேறு நபர்களோடு தகாத தொடர்பு ஏன்

வைக்க முடியாது? வைக்க மாட்டாள் என என்ன நிச்சயம்? என்ற எண்ணங்கள் வந்து விடுகின்றன. இதனாலே அப்பெண்ணுடன் கள்ளத் தொடர்பு வேண்டுமானால் வைத்துக் கொள்வர்.

ஆனால் ஒரு போதும் திருமணம் செய்வதற்கு தயாராகுவதில்லை. எனவே இளம் பெண்கள் இது போன்ற ஏமாற்றுப் பேச்சுக்களை நம்பவும் கூடாது. அறவே கவனம் செலுத்தவும் கூடாது. இவை நூற்றுக்கு நூறு வடிகட்டிய பொய்களாகும்.

பிறரை தன் சதி வலையில் விழவைப்பதற்கான யுத்தியாகும். ஆனால் வருத்தம் யாதெனில் பெண்கள் இதை முழுக்க நம்பிவிடுகிறார்கள். இறுதியாக பெரும்பாலான பெண்கள் எல்லாம் முடிந்த பிறகு விம்மிவிம்மி அழுகிறார்கள்.

இப்போது அழுதென்ன பயன்? இவ்வாறு அழுது புலம்புபவள் இந்த அபாயப் பாதையில் ஏன் காலடி எடுத்து வைக்க வேண்டும்? எப்போது இச்செயல் ஈமானுக்கே உலை வைத்து விடும், மானம் மரியாதையை இழக்கச் செய்து விடும் என்று தெரிந்து விட்டதோ பிறகு ஏன் அதை செய்ய துணிச்சல் கொள்கிறீர்கள்? எனவேதான் இது போன்ற எவரின் மாயவலையிலும், வசீகரப் பேச்சிலும் சிக்காமல் தன் கற்பு, மானத்தைப் பாதுகாத்துக் கொள்ளவே நிறைய வழிகாட்டல்களை நமது மார்க்கம் வழங்கியுள்ளது.

### புர்காக்களில் எளிமை:-

இது போன்ற நிலைகளை விட்டும் தப்பித்துக் கொள்ளவே, ஒரு பெண் வீட்டை விட்டு வெளியே செல்ல நேர்ந்தால் பர்தாவுடன் செல்ல வேண்டும் என்று

உத்தரவிட்டுள்ளது. அந்த பர்தாவும் மற்றவர்கள் பார்த்துக் கொண்டே இருக்கும் படியானதாக இருக்கக் கூடாது என்பது நிபந்தனையாகும்.

இன்றைய இளம் பெண்களில் பலர் பர்தா என்னவோ அணிகிறார்கள்; ஆனால் தேர்வு செய்யும் போதே அதைப் பார்க்கக்கூடியவர்கள் இந்த புர்காவிற்குள் இருப்பவள் சுவனப் பேரழகியோ என்று சிந்திக்கத் தூண்டுமளவிற்கு கண்கவர் புர்காக்களாக இருக்க வேண்டும் என்று தேடித்தேடி தேர்வு செய்கிறாள். ஆனால் அதனுள் இருப்பவளோ அசிங்கத்திலும் அசிங்கமானவளாகக்கூட இருக்கலாம் என்பது வேறு விஷயம்.

பெண்கள் புர்கா அணிய வேண்டும் என்றால் அதன் நோக்கம் தான் என்ன? அடுத்தவர்கள் நம்மைப் பார்க்காத வண்ணம் அல்லது பார்க்கத் தூண்டாத வண்ணம் நம்மை மறைத்துக் கொள்ள வேண்டும் என்பதேயாகும். எனவே மற்றவர்களை ஈர்க்காத வகையிலான புர்க்காக்களையே அணிய வேண்டும்.

இன்றைய வாலிபப் பெண்கள் பெரும்பாலும் கற்கள் பதிக்கப்பட்ட அலங்கார வேலைப்பாடுகள் செய்யப்பட்ட புர்காக்களையே அணிய விருப்பப்படுகிறார்கள்.

வயதாகிவிட்ட குழந்தைகள் இருக்கக்கூடிய பெண்களுக்கே இது போன்ற புர்காக்களை அணிவது பொறுத்தமற்றது என்றிருக்க வாலிபப் பெண்கள் அதை அணிவது அவளைப் பார்க்கும் ஆண்களை பாவத்தின் பால் அழைக்கத் தூண்டுவதைப் போன்றதாகும். எனவே எளிமையான புர்காக்களையே அணிய வேண்டும்.

இளம் பெண்கள் எப்போதாவது வெளியே செல்ல நேர்ந்தால் எவருடைய கவனத்தையும் ஈர்க்காத வண்ணம் சாதாரண புர்காக்களை அணிந்து செல்ல வேண்டும்.

ஆரம்பகால பெண்கள் சம்பந்தமாக நாம் கேள்விப்பட்டுள்ளோம். எப்போதாவது வீட்டை விட்டு வெளியே செல்ல வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டால் வயோதிகப் பெண் போன்றே வெளியேறுவார்கள்.

அப்போதுதான் எவருக்கும் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்படாது. ஆக அவர்களின் இறையச்சம் அவர்களை என்னவெல்லாம் செய்யத் தூண்டுகிறதென்று பாருங்கள்.

### பெண்களும், நறுமணமும்:-

ஒரு பெண் எப்போதாவது வெளியே செல்ல நேர்ந்தால் பர்தாவுடனேதான் செல்ல வேண்டும் என்பதோடு மற்றொரு விஷயத்தையும் மிக முக்கியமாக கவனிக்க வேண்டும். அதாவது அருகில் கடந்து செல்லும் ஆண்கள் உட்பட எவரும் உணராத விதத்தில் உள்ள வாசனை திரவியங்களை வேண்டுமானால் பயன்படுத்துவது கூடும். மாறாக அருகில் கடந்து செல்பவர்கள் உணரும் விதத்தில் பெண்கள் நறுமணம் பூசினால் அது ஹராமாகும்.

ஒரு ஹதீஸில் நபி ﷺ அவர்கள் எந்த பெண் நறுமணம் (வாசனை தரும் எல்லா காஸ்மெடிக்ஸ்) தடவிக் கொண்டு ஆண்களை கடந்து செல்வாளோ அவள் இப்படி, அப்படி என்று கூறினார்கள். இப்படி, அப்படி என்ற வார்த்தைக்கு முஹத்திஸீன்கள் நடத்தை கெட்டவள், தப்பெண்ணம் கொண்டவள் என்று விளக்கம் கூறியுள்ளனர்.

தவறுக்கான சந்தர்ப்பத்தை தேடியே இவ்வாறு நறுமணம் பூசிக்கொண்டு சுற்றுகிறாள் என்று அர்த்தமாகும்.

ஆண்களுக்கு பரவும் வாசனை கொண்ட நறுமணங்களைப் பயன்படுத்த அனுமதி உண்டு. ஆனால் பெண்கள் தனக்கருகில் வரும் தன் வீட்டு நபர்கள் மட்டுமே உணரும்படியான, தூரமாக இருப்பவர் வரை வாசனை அறவே பரவாத நறுமணத்தைத்தான் பயன்படுத்த வேண்டும்.

ஆனால் இன்றைய நடைமுறையோ தலைகீழாக மாறி இருக்கிறது. தான் சென்ற பிறகும் தனக்குப்பின் அத்தெருவில் கடந்து செல்பவர்கள் தன்னுடைய நறுமணத்தைப் பற்றிப் புகழ வேண்டும் என்ற எண்ணத்தில் பெரும்பாலும் நறுமணம் பூசுகிறவர்கள் எண்ணுகின்றனர். இது எவ்வளவு பெரிய அநீதம்.

**நாசூக்கான விஷயம்:-**

ஒரு பெண் நடந்து சென்ற காலடிச் சுவட்டில் மற்றொரு ஆணின் பாதம் பட்டவுடன் ஷைத்தான் அவனுக்குள் அப்பெண்ணின் ஆசையை ஏற்படுத்த முயல்வான் எனில் இது எவ்வளவு சிக்கலான, நாசூக்கான விஷயம் என்பதை சற்று யோசித்துப் பாருங்கள். எனவேதான் பர்தாவிற்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக மேலதிக நிறைய விளக்கங்கள் ஹதீஸ்களில் கூறப்பட்டுள்ளன.

ஆகவே வாலிபப் பெண்கள் இதை தங்களுடைய ஜிஹாது என விளங்கி, எந்நேரமும் யா அல்லாஹ் எங்களுக்கு இந்த ஜிஹாதில் வெற்றியை கொடுப்பாயாக என்று துஆ செய்து கொண்டே இருக்க வேண்டும். இதற்குப்

பகரமாக என்ன கிடைக்கும் தெரியுமா? அல்லாஹ்வின் மேலான திருப்பொருத்தம் கிடைக்கும்.

எனவே எப்போதாவது உள்ளம் பிறர்பால் சாய்ந்தால் உடனே உள்ளத்தை சீராக்குவதற்காக அல்லாஹ்விடம் துஆ செய்ய வேண்டும்.

## மாபெரும் கூலி:-

ஒருவரது உள்ளத்தில் பிறர் மீது காதல் ஏற்பட்டு அவர் அதை வெளிப்படுத்தாமல் மறைத்தவாறே அவருக்கு மரணமும் வந்துவிட்டால் அல்லாஹ் மறுமை நாளில் காதலை மறைத்து கற்பைப் பாதுகாத்ததிற்காக ஷஹீதுகளின் அந்தஸ்தை அவருக்குக் கொடுப்பான்.

எனவே தனது கற்பு, மானத்தை பாதுகாப்பது இளம் பெண்களின் மீதுள்ள முக்கிய கடமையாகும். மேலும் இதற்காக எவ்வளவு பேணுதல்களை மேற்கொண்டாலும் அனைத்திற்கும் அல்லாஹ்விடத்தில் மகத்தான கூலி நிச்சயமாக கிடைத்தே தீரும்.

## மார்க்க ரீதியான பேணுதல்கள்:-

ஒரு பெண் தன்னுடைய ஆடைகளை பிற ஆண்களின் பார்வை படுகின்ற இடத்தில் வைக்கக்கூடாது; மேலும் தனது பெயரைக் கூட பிற ஆண்களிடம் தெரிவிக்கக்கூடாது. ஆக பேணுதல் அடிப்படையில் பெயருக்குக் கூட பர்தா ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பெயர் கூற அவசியம் ஏற்பட்டால் இன்னாருடைய மகள், இன்னாருடைய மனைவி, இன்னாருடைய தாய் என்றே கூற வேண்டும். தன் பெயரை முடிந்தவரை வெளிப்படுத்தக்கூடாது. இது போன்ற பேணுதல்களை

கடைபிடிக்கும்படி மார்க்கம் கூறியிருப்பது ஷைத்தானுக்கு பாவத்தைத் தூண்ட எவ்வழியும் கிடைத்து விடக்கூடாது என்பதற்கேயாகும்.

## வாலிபத்திலே தவ்பா செய்தல்:-

பெண்கள் என்னுடைய குறி தவறாத அம்புகாளவர் என்று பாவத்தைத் தூண்டும் ஷைத்தான் கூறுவதாக வந்துள்ளது. மேலும் பெண்கள் ஷைத்தானுடைய வலைகளாவர்.

எனவே மேற்கூறப்பட்ட வழிமுறைகளை பேணாத போது ஷைத்தான் பெண்ணின் உள்ளத்திலும் ஆணின் உள்ளத்திலும் பாவ சிந்தனைகளைப் போடுகிறான். எனவே இவ்வகையான பாவத்தைத் தூண்டும் காரியங்களிலிருந்து தற்காத்துக் கொள்வது ஆண், பெண் இருவர் மீதும் பொறுப்பாகும். எவர் தன் இளமையை பரிசுத்தமானதாக பத்தினித்தனத்துடன் ஆக்கிக் கொள்வாரோ அவர் அல்லாஹ்விடம் பெருமதிப்பு கொண்டவராவார்.

**ஒரு கவிஞரின் கூற்றாவது;**

வாலிபத்திலே தவ்பா செய்வது தான் வலிமார்களின் பண்பாகும். வயோதிகத்தில் ஓநாய் கூட ஒழுங்காகிவிடுமே (அதாவது வயோதிகத்தில் கெட்டவர்களும் தவ்பா செய்ய எண்ணுவார்களே)

## துஆக்கள் ஏற்கப்படும் வாலிபர்:-

ஒரு வயோதிக அறிஞர் தனக்கு எப்போதெல்லாம் துஆ செய்ய சிந்தனை ஏற்படுகிறதோ உடனடியாக ஒரு நல்ல வாலிபரை சந்தித்து அவரை தனக்காக துஆ செய்யக் கோரிக்கை வைக்கக்கூடிய பழக்கமுள்ளவராக இருந்தார்.

ஒருவர் அந்த அறிஞரிடம் தாங்களே இவ்வளவு பெரிய நல்லடியாராக உள்ளீர்கள். தங்களின் தலைமுடியும் நரைத்து விட்டது. தங்களின் துஆவே அங்கீகாரம் மிக்கதாக இருக்க ஏன் சுயமே துஆ செய்யாமல், வேறு வாலிபரிடம் துஆ செய்யக் கூறுகிறீர்கள்? என்று கேட்டார். அதற்கவர் எவ்வாலிபர் தனது வாலிபத்தைப் பாதுகாத்துக் கொண்டவராக இருக்கும் நிலையில் துஆவிற்காக கையை உயர்த்தினால் அவரது கைகளை வெறுமனே திருப்புவதற்கு அல்லாஹ் வெட்கப்படுகிறான் என்று கிதபுாகளில் எழுதப்பட்டுள்ளது. எனவே வாலிபத்தை வணக்க வழிபாடுகள் வாயிலாக பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

மேலும் பாவங்களின் சந்தர்ப்பங்கள் ஏற்படாதவாறு முழுக்கத் தவிர்ந்து கொள்ளுங்கள்.

**ஷைத்தானின் படை:-**

பொழுது போக்கிற்காக புத்தகங்கள் படிக்கின்ற இக்கால இளம் பெண்களின் கைகளில் காதல் சம்பந்தப்பட்ட நாவல்களே பெரும்பாலும் இருக்கும். மேலும் கம்ப்யூட்டர் முன் அமர்ந்து எவருடனாவது சேட்டிங் செய்பவர்களாகவோ அல்லது குறைந்த பட்சம் டீ.வி முன் அமர்ந்து பொழுதைக் கழிப்பவர்களாகவோதான் இருப்பர். வீட்டில் டீ.வி. இருந்தால் ஷைத்தானின உதவிப்படை எப்போதும் தயாராக உங்களுடன் இருப்பதாக புரிந்து கொள்ளுங்கள்.

இது உண்மையில் டீ.வி. அல்ல உங்களின் ஈமானை அறிக்கும் டீ.பி. என்பதை மறந்து விடாதீர்கள். இக்காலப் பிள்ளைகள் பெற்றோர்களுக்குத் தெரியாமல் தவறு செய்ய என்னென்னவோ திட்டங்கள் தீட்டுகின்றனர்.

அவர்கள் என்ன செய்கின்றனர் என்பதை எவரும் கண்டுபிடித்திராத வகையில் பல காரியங்களை காதோடு காது வைத்தாற்போல் மேற்கொள்கின்றனர். வலக்கரம் தர்மம் செய்வதை இடக்கரம் அறியாத வகையில் தர்மம் கொடுக்க வேண்டும் என்று நன்மையை மறைத்து செய்யுமாறு மார்க்கம் உத்தரவிட்டுள்ளது.

ஆனால் இதற்கு நேர்மாற்றமாக வலக்கரம் செய்யும் தவறை இடக்கரமும் அறியாதவாறு இக்காலத்தில் பாவங்கள் மறைத்து மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால் எதுவரை மறைக்க இயலும்; மக்களிடம் வேண்டுமானால் மறைக்கலாமே தவிர உள்ளங்களின் இரகசியங்களை அறியக்கூடிய இறைவனிடம் எவ்வாறு மறைக்க இயலும்.

**மானத்தைப் பாதுகாக்க இலேசான வழி:-**

பிள்ளைகள் வாலிபமடைந்து விட்டால் பெற்றோர்களின் முதற்கடமை தகுந்த ஜோடி கிடைத்தவுடனேயே திருமணம் செய்து வைத்து விடுவதே. ஆனால் இக்காலத்தில் அநேக பெற்றோர்கள் முதலில் புதிய வீடு கட்ட வேண்டும். பிறகு தான் திருமணம் என்று மகளின் திருமணத்தைத் தாமப்படுத்துகிறார்கள்.

இது போன்ற பெற்றோர்கள் தமது பிள்ளைகளுடைய பாவங்களின் காரணமாக நரக வேதனையை சுவைப்பார்கள் என்பதென்னவோ உறுதி. தாங்கள் வயோதிகமடைந்து விட்டதால் தங்களின் எண்ணங்கள் பக்குவப்பட்டு எவர் சம்பந்தமாகவும் தவறான எண்ணங்கள் வருவதில்லை என்பது போல் தங்களது பிள்ளைகளுக்கும் எந்தத் தீய எண்ணங்களும் அவர்களது உள்ளத்தில் வராது என்று எண்ணிக் கொள்கின்றனரோ தெரியவில்லை. இது எவ்வளவு பெரிய அறியாமை!

## அதாவுல்லாஹ் ஷாஹ் புகாரி ﵀ அவர்களின் உணர்வுப் பூர்வமான உபதேசம்:-

சைய்யது அதாவுல்லாஹ் ﵀ அவர்கள் நண்பர் ஒருவரின் வீட்டில் விருந்தாளியாக தங்கினார்கள். அவ்வீட்டில் ஒரு இளம் பெண் இருப்பது தெரிய வந்த போது தாயே உங்கள் மகளுக்கு உடனடியாக திருணம் செய்து வைய்யுங்கள் என்று ஆலோசனை கொடுத்தார்கள். உடனே அவளின் தாயார் என் மகள் இன்னும் பால்யப் பருவத்தைக் கூட தாண்டவில்லை. அதற்குள் திருமணமா? என்று வியப்புடன் கேட்டார். அதற்கு சைய்யது அவர்கள், நீங்கள் அவசியம் உட்டினயாக திருணம் செய்து வையுங்கள். ஏனெனில் பால் கெட்டுவிட்டால் அதை நாய்கள் தான் குடிக்கும். மனிதர்கள் குடிக்கமாட்டார்கள் அல்லவா? என்றார்கள்.

பெற்றோர்கள் பிள்ளைகளின் மானம் கெட்டுப் போன பிறகு திருமணம் செய்து வைக்கலாம் என்பதற்காகவா தாமதிக்கின்றனர்? எனவே உடனடியாக திருமணம் செய்து வைத்து இந்தக் கடமையை முடித்து விட்டால் அவள் புகுந்த வீட்டில் தனது கற்பு, மானத்தோடு வாழ ஏதுவாக இருக்குமல்லவா?

## பெண்ணின் முதற் கடமை:-

எப்பெண்ணுக்கு அல்லாஹ் நல்ல கணவன், குழந்தைகளை வழங்கியுள்ளானோ அவள் பெரும் பாக்கியசாலியாவாள். எனவே அவள் வேறெந்த ஆணையும் ஏறெடுத்தும் பார்க்க வேண்டாம். அவ்வாறு செய்தால் அல்லாஹ்வுடைய அருட்பாக்கியங்கள் அவளிடமிருந்து பறிக்கப்படுவதற்கு காரணமாகிவிடும். தனது கற்பு, மானத்தை பாதுகாத்துக் கொள்வதே மிக முக்கியமான விஷயமாகும்.

கண்களின் பர்தா எவ்வளவு சிறியது ஆனால் எவ்வளவு வேகமானது?

பார்வையைத் தாழ்த்தும் படி அல்லாஹ் ஏவியுள்ளானே, கண்களுக்கு இமை எவ்வளவு சிறியது ஆனால் எவ்வளவு வேகமாக இயங்கக்கூடியது என்பதை அறிவீரா? கண்ணிமைக்கும் நேரம் என்பதை வேகத்திற்கு உதாரணமாக கூறப்படுமளவு மிகத்துரிதமாக இயங்கக் கூடியதாகும். மனித உறுப்புகள் அனைத்திலும் வெகு சீக்கிரமாக இயங்கும் உறுப்பாக கண்களின் இமைகளை அல்லாஹ் ஆக்கியுள்ளான். ஒரு வேளை தாமதமாக, மெல்ல மூடும் திரைகளை ஏற்படுத்தியிருந்தால், இறைவா! நான் தீய பார்வையிலிருந்து தவிர்ந்து கொள்ள கண்களை மூடிக் கொள்ளவே நினைத்தேன். ஆனால் என்ன செய்வது கண்திரை மெதுவாக மூடக்கூடியதாக இருந்ததால் மூடுவதற்குள் அப்பெண் மீது பார்வை பட்டு விட்டது என அல்லாஹ்விடம் சாக்கு சொல்ல மனிதனுக்கு வாய்ப்பு ஏற்பட்டுவிடுமல்லவா!

அன்னை ஆயிஷா رضي الله عنها கூறுகிறார்கள்; நபி ﷺ அவர்களது கண்களில் மதீனத்து கன்னிப்பெண்களின் கண்களில் இல்லாத வெட்கத்தை நான் கண்டுள்ளேன்.

## ரோஷமும் ஈமானாகும்:-

ஒரு ஹதீஸில் வருவதாவது எவரிடத்தில் ரோஷம் இல்லையோ அவரிடம் ஈமான் இல்லை. மற்றொரு ஹதீஸில் நான்தான் ஆதமுடைய மக்களிலேயே அதிக ரோஷமிக்கவன். அல்லாஹ் என்னை விட அதிகம் ரோஷமிக்கவனாவான் என்று நபி ﷺ அவர்கள் கூறினார்கள்.

## அந்நியருடன் தனித்திருப்பது அபாய மணியாகும்:-

ஆணோ, பெண்ணோ மஹ்ரமல்லாதவர்களுடன் தனித்திருப்பது ஆகுமானதல்ல என்று ஹதீஸில் வந்துள்ளது. எனது ஆன்மீக ஆசான்கள் ஹஸன் பஸரி ﵀ போன்ற ஆன்மீக வலிமை பெற்ற மகான் ஆசிரியராக, ராபியா பஸரிய்யா ﵀ போன்ற இறை நேசச் செல்வி மாணவியாக இருந்து குர்ஆனையே கற்றுக் கொடுத்தாலும் அவர்கள் தனிமையில் இருந்தால் ஷைத்தான் அவர்களையும் கூட பாவத்தில் ஈடுபடவைத்து விடுவான் என்று கூறக் கேட்டுள்ளேன்.

## இசையின் விபரீதங்கள்:-

இசைக் கேட்பது காதுகளின் விபச்சாரம் என்று ஹதீஸில் வருகிறது. மேலும் நான் இசைக்கருவிகளை உடைப்பதற்காகவே வந்துள்ளேன் என்றும் நபி ﷺ அவர்கள் கூறினார்கள். மேலும் மழை நீர் பூமியில் பயிர்களை முளைவிப்பது போன்று இசை உள்ளத்தில் நயவஞ்சகத்தனத்தை உருவாக்குகின்றது என்றும் கூறியுள்ளார்கள்.

ஆகவே எப்பிள்ளைகளுக்கு இசை கேட்பதில் ஆர்வம் இருக்குமோ உண்மையில் அந்த ஆர்வம் பாவத்தின் பக்கம் இழுத்துச் செல்வதற்கான ஆர்வமாகும். எனவே நீங்கள் இசையை விட்டும் தம்மைத்தாமே தூரமாக்கிக் கொள்ளுங்கள்.

## மிகச்சிறந்த பெண்மணி:-

ஒரு முறை நபி ﷺ அவர்களது சபையில் அனைவரிலும் மிகச்சிறந்த பெண்மணி யார்? என்ற கேள்வி எழுந்தது.

ஒவ்வொருவரும் ஒவ்வொன்றைக் கூறினார்கள். ஹழ்ரத் அலீ ﵁ அவர்கள் அங்கிருந்து ஏதோ ஒரு வேலையாக வீட்டிற்கு வந்தவர்கள் தன் மனைவியிடம் சபையில் நடந்ததை கூறினார்கள். அன்னை பாத்திமா ﵂ அவர்கள், மிகச் சிறந்த பெண்மணி யார் என்று கூறட்டுமா? என்றார்கள். ஹழ்ரத் அலீ ﵁ கூறுங்கள் என்றதும், எந்தப் பெண் தான் எந்த அந்நிய ஆணை பார்க்காமலும் எந்த அந்நிய ஆணும் தன்னைப் பார்ப்பதற்கு இடம் கொடுக்காமலும் இருப்பாளோ அவள்தான் என்றார்கள். இதைக் கேட்டு வந்து அலீ ﵁ அவர்கள், நபி ﷺ அவர்களிடத்தில் அதை தன் கருத்தாக கூறினார்கள். இதைக் கேட்ட நபி ﷺ புன்முறுவல் பூத்தவர்களாக.... ஃபாத்திமா என் ஈரக்குலைத் துண்டு என்றார்கள்.

சுவனத்து தலைவி ஃபாத்திமா ﵂ கூறியுள்ளார்கள். மிகச் சிறந்த பெண் யாரெனில் இவளும் எந்த அந்நிய ஆணை பார்க்காமலும், எந்த அந்நிய ஆணும் இவளைப் பார்க்க இடம் கொடுக்காமலும் இருப்பவளே. எனவே அனைத்து அந்நிய ஆண்களிடமிருந்தும் உங்களை மறைத்துக் கொள்ளுங்கள். மேலும் எந்தளவெனில் பர்தாயின்றி சுற்றித் திரிகின்ற தவறான பெண்கள் முன்பாகவும் கூட நீங்கள் பர்தாவைப் பேணுங்கள். அவளும் மஹ்ரமல்லாத ஆணைப் போன்றுதான் என்பதாக நம்முடைய ஷரீஅத் கூறுகின்றது.

அதே போன்று ஒரு திருமணமான பெண் தன் கணவருடன் தனிமையிலிருக்கும் போது நடக்கும் விஷயங்களை மற்ற பெண்களிடம் கூறுவதை விட்டும் தடுக்கப்பட்டுள்ளாள். அப்படி கூறுபவளை மிக அசிங்கமான பிராணிக்கு ஒப்பிட்டு ஹதீஸில் கூறப்பட்டுள்ளது.

## ஷாஹ் அப்துல் அஜீஸ் ﵀ அவர்களது மாணவரின் ஈமான் ததும்பும் சம்பவம்:-

ஷாஹ் அப்துல் அஜீஸ் ﵀ அவர்களிடத்தில் ஒரு மாணவர் கல்வி கற்று வந்தார். அவரை ஒரு முறை ஒரு பெண் வஞ்சகமாக எங்கள் வீட்டில் நோயாளி உள்ளார். ஆகையால் நீங்கள் வந்து ஓதி ஊதி விட்டு செல்லுங்கள் என்று கூறி வீட்டிற்கு அழைத்தாள். அவர் அப்பாவியாக இருந்ததால் அவளுடைய வீட்டிற்குச் சென்றார்கள். வீட்டிற்குள் நுழைந்ததும் அவள் கதவை மூடிவிட்டாள். இவருக்கு அவளது தவறான எண்ணம் தெரியவந்த போது எனக்கு அவசரமாக கழிவறை செல்ல வேண்டும் என்று கூறிவிட்டு கழிவறை சென்றவர் அங்கே கிடந்த மலத்தை எல்லாம் அள்ளி மேனியில் பூசிக் கொண்டு வெளியே வந்தார். உடலில் ஒரே துர்வாடை வீசியது. அந்த பெண்ணிற்கு அருகில் வந்த போது துர்வாடை தாங்க முடியாமல் நீ இவ்வளவு பெரிய முட்டாளாக இருக்கிறாயே! இங்கிருந்து வெளியே சென்று விடு என்று கூறி கதவை திறந்தவுடன் தனது ஈமானைப் பாதுகாத்தவாறு வேகமாக வெளியே வந்து விட்டார்.

இப்போது என் உடம்பிலிருந்து வெளிப்படும் துர்நாற்றத்தைப் பற்றி கேட்பவர்களுக்கு என்ன பதில் கூறுவேன் என்று எண்ணி அழ ஆரம்பித்து விட்டார். பிறகு நேராக மதரஸாவிற்கு வந்து குளியலறையில் அந்த அசுத்தமான துணியை துவைத்து, குளித்து விட்டு அதை ஈரமாகவே அணிந்து கொண்டு ஹழ்ரத் அவர்களின் பாடத்திற்கு வந்து எல்லோருக்கும் பின்னால் அமர்ந்து கொண்டார். இவர் எப்போதும் பாடத்திற்கு தாமதமாக வந்ததில்லை. ஆனால் இன்று தாமதமாகிவிட்டது.

சிறிது நேரம் கழித்து ஹழ்ரத் அவர்கள் பாடத்தை நிறுத்திவிட்டு, யார் உங்களில் இவ்வளவு வீரியமான நறுமணம் பூசி வந்தது என்று கேட்க மாணவர்கள் அங்குமிங்கும் பார்த்தபோது ஒரு மாணவர் இப்போதுதான் இந்த புதிய மாணவர் வந்தார். இவர்தான் நறுமணம் பூசியிருக்கக்கூடும் என்றார்.

ஹழ்ரத் அவர்கள் அவரை அருகில் அழைத்து நீ ஏன் இவ்வளவு மணம் வீசும் நறுமணத்தை பூசியுள்ளாய் என்று கேட்டார்கள். திரும்பத் திரும்ப கேட்ட போது அவரின் கண்களில் கண்ணீர் பெருக்கெடுக்க நடந்ததைக் கூறினார்.

ஹழ்ரத் அவர்களே! நான் எனது மானத்தைப் பாதுகாக்க எனது உடலின் மீது மலத்தை அள்ளிப் பூசினேன்.

ஆனால் இப்போது நான் குளித்து விட்டேன்; என் உடலில் எங்கெங்கு அசுத்தம் ஒட்டியிருந்தோ அப்பகுதியிலிருந்து நறுமணம் வீசுகிறது என்றார். அவர் உயிரோடிருந்தவரை அவரது உடலிலிருந்து கஸ்தூரியின் மணம் வந்து கொண்டேயிருந்தது.

புத்தகங்களில் எழுதுகிறார்கள் இதன் காரணமாகவே அவரது பெயர் காஜா முஸ்கீ கஸ்தூரி மணம் கமழும் காஜா என்று பிரபல்யமாகிவிட்டது. பாவத்தை விட்டு தப்பிப்பதற்காக எந்தெந்த இடத்தில் அசுத்தத்தைப் பூசினாரோ அவரது உடலின் அப்பகுதியிலிருந்து நறுமணம் வந்து கொண்டிருந்தது.

**உண்மையான அழகு:-**

எவர் அந்நிய நபர்களை விட்டும் தனது பார்வையைப் பாதுகாத்துக் கொண்டாரோ அவருக்கு அல்லாஹ் வணக்க

வழிபாட்டில் இன்பத்தை தருகிறான் என்று ஹதீஸில் வருகிறது.

நினைவில் வையுங்கள். உடல் அழகான பெண்ணைப் பார்ப்பதால் கண்கள் இன்புறும். ஆனால் உள்ளம் அழகான பெண் மூலமாகவே உள்ளம் இன்புறும். எனவே உருவத்தை அழகுபடுத்துவதற்கு பதிலாக உள்ளத்தை அழகுபடுத்துங்கள்.

**நான் இளம் பெண்களுக்கு கூறிக் கொள்கிறேன்;-**

- உயரம் – ஹை ஹீல், செருப்பில்லாமலும் எடுப்பாகத் தெரியும். அவளின் பெண்மைத்துவத்தில் உயர்வு இருந்தால்!
- கண்கள் சுர்மா இல்லாமலும் கவர்ச்சியாகத் தெரியும். அவளுக்குள் வெட்கம் இருந்தால்!
- இமைகள் மை இடாமலும் ஈர்ப்பாக இருக்கும். அது வெட்கத்தால் கீழ்நோக்கி இருந்தால்!
- நெற்றி நெத்திச்சுட்டி இல்லாமலும் பிரகாசமாக ஒளிரும் அதில் ஸஜ்தாவின் அடையாளம் இருந்தால்!

**ஆங்கிலத்தில் ஒரு அழகிய அறிவுரை கூறப்பட்டுள்ளது:-**

- **Wealth lost nothing lost** – செல்வத்தை இழந்தவர் எதையும் இழக்கவில்லை.
- **Health lost something lost** ஆரோக்கியத்தை இழந்தவர் ஒரு சிலதை இழந்து விட்டார்.
- **Charecter lost everything lost** – குணத்தை இழந்தவர் எல்லாவற்றையும் இழந்து விட்டார்.

- **So People feel that Charactor is not a precious thing-** பலர் நற்குணம் ஒரு மதிக்கத்தக்க விஷயம் அல்ல என்று கருதுகின்றனர்.
- **But can buy the most precious thing of the world with the help of your charecter** -ஆனால் உலகின் மிக மதிப்புமிக்கதையும் உன் நற்குணம் மூலம் வாங்கிவிட முடியும்.

**பார்வை செல்லாத பண்பாட்டுக் கோணங்கள்:-**

மக்களை ஆயுதத்தினால் அடிபணிய வைக்க முடியாது. ஆனால் நற்குணத்தினால் அவர்களை அடிமையாகவே ஆக்கிவிட முடியும் என்பதை மறந்து விடாதீர்கள். முஜத்தித் அல்பஸானி ﵀ அவர்களின் கூற்றாவது:

ஒருவரின் பார்வை தீயதாகிவிட்டால் பிறகு உள்ளத்தை தீய எண்ணத்திலிருந்து பாதுகாப்பது மிகக் கடினமாகிவிடும். உள்ளம் கெட்டு விட்டால் மர்மஸ்தானத்தைப் பாதுகாப்பது மிக மிக கடினம். எனவே அறிவாளி என்பவன் பிறரின் தவறிலிருந்து படிப்பினை பெற்று செயல்படுவான். ஆனால் மடையன் தவறு மேல் தவறு பல செய்து விட்டு அதைத் தவறு என்பதைக் கூட தாமதமாகவே புரிவான்.

ஆக அழகுதான் ஒரு பெண்ணை அழிவில் போடும் அபாயம் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். ஒரு பெண் எதிர்கொள்ளும் பிரச்சனைகளில் பெரும்பாலானவை அவளின் அழகின் காரணமாகவே ஏற்பட்டிருக்கிறது. எனவே கெட்ட பெண்களை விட்டு தூர விலகிவிடுதலும், நல்ல பெண்கள் என்றாலும் கூட மிக ஜாக்கிரதையாகவே இருப்பதும் நமது மார்க்கம் ஆண்களுக்கு கூறும் அறிவுரையாகும். உள்ளத்தில்

தோன்றும் எல்லா கெட்ட எண்ணங்களும், மனதில் ஏற்படும் சஞ்சலங்கள் யாவும் தீய பார்வையினாலேயே உண்டாகின்றன. நமது தாய் ஹவ்வா ﷺ விலக்கப்பட்ட மரத்தை பார்த்திருக்காவிட்டால் சொர்க்கத்திலிருந்து வெளியேறும் நிர்பந்தம் ஏற்பட்டிருக்காது.

காபீல், ஹாபிலின் மனைவியை பார்த்திருக்காவிட்டால் கொலைக் குற்றத்தை சுமந்திருக்கத் தேவை இருந்திருக்காது. ஜுலைகா, யூசுப் ﷺ அவர்களை பார்த்திருக்காவிட்டால் குர்ஆனில் அப்பெண்ணின் தவறு விமர்சிக்கப்பட்டிருக்காது.

எனவே இன்னாரின் தோற்றம், நடத்தை எனக்கு பிடித்துள்ளது என்ற சொற்கள் அனைத்தும் வீணான உளறல்களே! உண்மையான அன்பு என்பது ஒருவனது நல்ல அமல்கள் மூலமே ஏற்படும் என்பதாக அல்லாஹ் தீர்மானித்துள்ளான். முக அழகு என்பது தற்காலிகமான ஒன்றாகும். வாலிபத்தினால் இன்று அவளின் முகம் அழகாகத் தெரியலாம். ஆனால் ஓரிரு பிள்ளைகள் பெற்ற பின் முகத்தில் முன்பிருந்த கவர்ச்சி இல்லாமலாகிவிடும். இன்னும் சற்று வயதாகி விட்டாலோ அவளின் தோற்றமே அடையாளம் தெரியாமல் வேறு நபரை போன்று மாறிவிடும்.

ஆக பெண்ணின் அழகினால் மட்டுமே கவரப்பட்டு அவளை திருமணம் செய்து கொண்ட நபரின் அன்பு சில வருடத்திலேயே நீங்கிவிடும். பிறகு வேறொருவளைத் தேட ஆரம்பித்து விடுவான். எனவே அன்பின் அளவு கோல் புற அழகல்ல; மாறாக அக அழகே பிரதானமானதாகும். புறத்தோற்ற அழகு என்றாவது ஒரு நாள் அழிந்து விடக்கூடியதாகும். ஆனால் அக அழகான நற்குணமோ என்றும் நிரந்தரமானதாகும்.

மேலும் புற அழகானது எவ்வளவு தூர இருப்போமோ (அருகில் இருப்பதோடு ஒப்பிடுகையில்) அவ்வளவு அழகாகத் தெரியும். எவருடைய குரலையாவது தூரத்திலிருந்து கேட்டால் அருகில் கேட்பதை விட மிக அழகாகத் தெரியும். புற அழகின் யதார்த்தம் தூரத்திலிருப்பதை வைத்தேயாகும். ஒருவர் தூரமாக இருக்கும்போது அழகுள்ளவராக தெரிந்து, அருகில் வந்தால் அழகற்றவராக வேறு மாதிரியாக காட்சியளிப்பது தான் புற அழகின் மாயையாகும்.

## இச்சையின் தொடக்கமும் - முடிவும்:-

ஒரு மனிதன் தவறு செய்யும் முன் தைரியமானவனாக இருப்பான். ஆனால் எப்போது பாவம் செய்திடுவானோ அதை மறைப்பதற்கு பல பொய்களை கூறித்திரியும் கோழையாக மாறிவிடுவான். இச்சை என்பது சுவைத்தவரை அழித்திடும் விஷமாகும். மேலும் விருப்பு, வெறுப்பு என்பது எப்போதும் பிறர் பார்வையை விட்டு மறைந்ததாக இருக்காது என்பது அடிப்படை விதியாகும். நான் ஒருவரை விரும்புவேன் ஆனால் யாருக்கும் தெரியக்கூடாது என்று எண்ணுவது மடத்தனத்தின் உச்சகட்டமாகும். அன்பும், விரோதமும் அவசியம் வெளிப்பட்டே தீரும்.

ஆசையின் தொடக்கம் சிறிய புழு போன்றது. அதை அழிப்பது இலேசானது. ஆனால் அதன் இறுதி நிலை படம் எடுக்கும் நாகப்பாம்பு போன்று அம்மனிதனையே அழித்துவிடும் ஆற்றல் பெற்று விடும். எனவே புற அழகை அலங்கரிப்பதற்கு பதிலாக நற்குணங்களை மென்மேலும் மேம்படுத்திக் கொள்ள முற்படுவீராக! எவ்வாறு முற்களுக்கு மத்தியில் மலர் இருந்தால் கிளை அழகுற காட்சிளிக்குமோ அவ்வாறே நல்ல பெண் மூலம் அவளின் வீடே அழகு

பெற்றிடும். அவள் அவ்வீட்டையே சொர்க்க பூமியாக, கண்ணியமுள்ள வீடாக மாற்றிவிடுவாள்.

## உள்ளத்தில் எழுதிக் கொள்ளுங்கள்:-

மனிதன் தன்னைச் சுற்றியுள்ள ஒவ்வொரு பொருளிலிருந்தும் ஆனந்தம் பெற விரும்புகிறான். ஆனால் தன்னைத் தானே வென்று அடையும் ஆனந்தத்திற்கு அளவேதும் இல்லை. இக்கருத்தை மீண்டும் மீண்டும் படித்து மனதில் பதிய வைத்துக் கொள்ளுங்கள். எனவே வாலிபப் பெண்கள் தன்னை தானே வெற்றி கொண்டு மகிழ்ச்சியான வாழ்விற்கு வித்திடுங்கள். உங்கள் இறைவன் முன் பாக்கியசாலியாகிவிடுவீர்கள்.

## இறைப் பார்வையிலிருந்து பாக்கியமற்றவள்:-

எப்பெண் அந்நிய ஆண் தன்னைப் பார்த்து இரசிப்பதற்காகவே குளித்து, சீவி, சிங்காரித்து, கண்கவர் ஆடை அணிந்து, நறுமணம் பூசிக் கொள்வாளோ மறுமை நாளில் நான் அவளை என் அருள் பார்வையால் பார்க்க மாட்டேன் என்று அல்லாஹ் அறிவித்துள்ளான்.

எனவே நீங்கள் அந்நிய ஆண்களின் பார்வையை விட்டும் தவிர்ந்து உங்களின் கண்ணியத்தைப் பேணிக் கொள்ளுங்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் உதவி புரிவானாக. மேலும் நல்வாழ்வு வாழ அருள்புரிவானாக!

மேலும் தவ்பாவின் கதவுகளோ திறக்கப்பட்டிருக்கும் நிலையிலே கடந்த பாவங்களை எண்ணி வருந்தி உண்மையான பாவமன்னிப்பைத் தேடிக் கொள்ளுங்கள்.

அல்லாஹ் மன்னிப்பானாக! ஆமின்...!

## குறிப்புகள்:-